# கள்ளுக் கொட்டில்கள் இன்று முதல் 3 நாட்கள் மூடப்படும்

Registered as a NewsPaper in Ceylon  விலை சதம் 15 ★

ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் 69
போன்: 389

மலர் 12
இதழ்: 104
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் வைகாசி 12 ரபி. அவ் 19 செவ்வாய்க்கிழமை [26-5-70]




புதிய முறையில் நல்ல தரத்தில் தயாரித்து வெளியிடும் எவர் பிறைற் சோப்பைப் பாவியுங்கள்.
பிறேமா தொழிற்சாலை, பருத்தித்துறை

யாழ்ப்பாணம், செவ்.
வடமாகாணத்திலுள்ள கள்ளுக்கொட்டில்கள் இன்று முதல் 28-ம் திகதிவரை தினமும் மாலை 6 மணிக்கு மூடப்படவேண்டுமென்றும் இதனை மீறும் கள்ளுக் கொட்டில் சொந்தக்காரர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்றும், பொலிஸ் உயர்தர அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நேற்றுமுதல் இது அமுலாக்கப்பட்டதென்றும், யாழ்ப்பாணத்தில் சில இடங்களில் நேற்று கள்ளுக்கொட்டில்கள் 6 மணிக்கு மூடப்பட்டதாகவும் அவர் சொன்னார்.

நேற்று 6 மணிக்குப்பின் திறந்திருந்த சில கள்ளுக் கொட்டில் உரிமையாளர்கள் விசாரணை செய்யப்பட்டுவருவதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

அசம்பாவிதங்களை தடுக்கும்முகமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

சாராயத் தவறணைகள் யாவும் நேற்றுமுதல் நான்கு நாட்களுக்கு மூடப்பட்டுள்ளன. தேர்தலையொட்டி பாடசாலைகளுக்கும் விடுமுறை யளிக்கப்பட்டுள்ளது.

# பிரசாரங்கள் யாவும் ஓய்ந்தன: நாடு பூராவும் இன்று அமைதி!

## ‘கட்சிகள் தமிழினத்துக்கு பெற்றுக்கொடுத்ததென்ன?’

யாழ்ப்பாணம் திங்கள்
கடந்த 25 வருடங்களில் கட்சி அடிப்படையில் ஆட்சிமன்றத்துக்குப் பிரதிநிதிகளை அனுப்பி அவர்கள் தமிழ் மக்களுக்கு சாதித்தது என்ன? சுயேச்சை வேட்பாளனாக நான் ஆட்சிமன்றத்துக்குச் சென்றால் சிங்கள கட்சிகளுடன் நிபந்தனையுடன் ஒத்துழைத்து தொகுதிக்கும் தமிழினத்துக்கும் என்னாலானதைச் செய்வேன்.’

இவ்வாறு யாழ்ப்பாணத் தொகுதியில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் திரு அல்பிரட் ரி. துரையப்பா குருநகரில் நேற்று இரவு தம்மை ஆதரித்து நடந்த பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ்மாநகரசபை அங்கத்தவர் திரு எம். என். ... பேரின்பநாயகம் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் திரு. துரையப்பா மேலும் பேசுகையில் கடற்றொழில் அபிவிருத்திக்கு ஒரு காப்புறுதித் திட்டத்தையும் வீடமைப்புத் திட்டத்தையும் என் முதல் வேலைகளில் ஒன்றாக ஏற்படுத்தித்தருவேன். ஞாயிற்றுக் கிழமையைவிடுமுறை தினத்திலிருந்து ரத்துச்செய்யப்பட்டதை நம்மவர்கள் எவரும் எதிர்க்கவில்லை இதனை மாற்றும் முயற்சியையும் மேற்கொள்வேன். என்றார்.

யாழ் மாநகரசபை அங்கத்தவர்கள் எம். ஷி. பஷிர் எம். ஏ. சி. எஸ். காதர், கே. வ. தெய்வேந்திரன் திரு எஸ் மகாதேவா பி. காங்கேசு ஆர். நவரத்தினம் திரு மதி ஆர். சவரிமுத்து உட்பட பலரும் பேசினர்.

## நாளை பொதுத் தேர்தல்
## ஆயுதப் பொலிசார் உஷார்

யாழ்ப்பாணம், செவ்

**தேர்தல் பிரசாரங்களிலும் ஆதரவு திரட்டுவதிலும் கடந்த ஒரு மாதகாலமாக அயராது உழைத்த வேட்பாளர்களும் அவர்களின் ஆதரவாளர்களும் இன்று ஓய்வு பெற்றுக் கொள்வார்கள். ஒருமாதமாதகாலமாக அரசியல் கட்சிகளதும், சுயேட்சை வாதிகளதும் கொள்கை விளக்கங்களையும் ஓய்வாகவிருந்து அலசி ஆராய்ந்து முடிவெடுத்துக் கொள்வதற்கு வாக்காளர்களுக்கு அளிக்கப்படும் சந்தர்ப்பம் இதுவாகும்,**

நேற்றுநள்ளிரவுடன் தேர்தல் பிரசாரங்கள் முடிவடைந்துவிட்டன. நாளை தேர்தல் நடைபெறும் போது அசம்பாவிதங்கள் ஏற்படாதவாறு கண்காணிப்பதற்கு ஆயுதந் தாங்கிய பொலிசார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பொலிஸ் கோஷ்டிகள் இன்று வாக்களிப்பு நிலையங்களுக்கு செல்கின்றனர் அசம்பாவிதங்கள் ஏற்படுத்துவோரைக் கைதுசெய்யப்படுவதுடன் வாக்களிப்பிலிருந்து தடுத்துவைக்கப்படுவர் என்றும் பொலிஸ் அதிபர் அறிவித்துள்ளார்.

நாடுபூராவுமுள்ள 145 தொகுதிகளில் 5600 வாக்குச்சாவடிகளில் வாக்களிப்பு நடைபெறும். தேர்தல் நிலையங்களில் கடமையாற்...

## ஆட்சி தொடர்ந்தால் வேலை நிறுத்தம்

101 ஸ்தானங்கள் இருந்தபோது

# அன்று பெறமுடியாத உரிமையை இன்று ஜி. ஜி. எப்படி பெறுவார்?

## முற்றவெளி தமிழரசு கூட்டத்தில் பேச்சு

யாழ்ப்பாணம், திங்கள்
‘நாடு சுதந்திரமடைந்த பின்னர் நாட்டு விடுதலைக்குத் தமிழரும்பாடுபட்டார்கள் என்ற எண்ணம் சிங்கள மக்கள் நெஞ்சில் மறக்கப்படாத ஒரு காலகட்டத்தில் ஆட்சிமன்றத்தில் மொத்தம் 101 ஸ்தானங்கள் மட்டும் இருந்தபோது வடக்கு கிழக்கு மாகாணங்களின் தலைவராக ஆட்சிமன்றம் சென்ற திரு ஜி. ஜி பொன்னம்பலத்தினால் எமது உரிமைகளைப் பெற்றுத்தர முடியாதிருந்ததென்றால் ஆட்சிமன்றத் தானங்கள் 151 ஆக அதிகரிக்கப்பட்டு தமிழர் பிரதிநிதித்துவம் குறைக்கப்பட்டு தமிழர் துவேஷம் அதிகரித்துள்ள இன்று உரிமைகள் பெற்றுத்தர அவரால் எப்படி முடியும்’

கொட்டடி தமிழரசு வாலிபமுன்னணியின் ஆதரவில் யாழ்ப்பாணத் தொகுதி தமிழரசு வேட்பாளர் திரு ஸி எக்ஸ். மாட்டினை ஆதரித்து நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேர்தற் பிரசாரக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசிய திரு ந. சுப்பிரமணியம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொட்டடி முற்றவெளி மைதானத்தில் முத்தமிழ் அரங்கில் இக் கூட்டம் நடந்தது.

திரு சுப்பிரமணியம் தமது பேச்சில் மேலும்குறிப்பிட்டதாவது:

ஐ. நா. சபையிலே ஒரு தமிழரின் குரல் ஒலித்தமைக்காகப் பெருமைப்படும் நாம் திரு கிருஷ்ணமேனன் ஐ நா சபையிலே தொடர்ந்து பல மணிநேரம் பேசிப்பல சாதனைகளைப் புரிந்து உலகின்கவனத்தை இந்தியாவின்பால் திருப்பியபோதிலும் அவரது கொள்கைவேறுபாடு காரணமாக இந்திய மக்கள் அவரைத் தேர்தலில் நிராகரித்துவிட்டதை நன்கு சிந்திக்க வேண்டும். காங்கிரஸ் கட்சியை நாம் நம்பியிருந்த காலத்தில்தான் தமிழ்மக்களின் மொழி உரிமை அரசுரிமை குடியுரிமைகள் பறிக்கப்பட்டன,

திரு. சி. சந்திரகாசன் பேசுகையில், கடந்த தேர்தலின் போது கூட்டணியினர் ஆட்சியைக் கைப்பற்றிப் பத்திரிகைகளைத் தேச உடமையாக்காதவாறு பாதுகாத்த நன்றிக் கடனாக இன்று சில பத்திரிகைகள் தமிழரசுக் கட்சிக்கு மாறாகப் பொய்ப் பிரசாரம் செய்து வருகின்றன’ என்றார்,

வேட்பாளர் திரு ஸி எக்ஸ் மார்ட்டின் தமதுபேச்சில் மக்களிடம் வாக்குக் கேட்டுவரும் வேட்பாளர்கள் இதுவரை தமிழ் மக்களுக்குச் செய்த நன்மை தீமைகளை நன்கு சிந்தித்து நியாயத்தின் வழிநின்று தமது வாக்குகளை உபயோகிக்குமாறு மக்களைக் கேட்டுக்கொண்டார்.

டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம் திரு சோ. தவலிங்கம் திரு பற்குணராசா ஆகியோரும் பேசினர்.

## ‘‘தேரில் இருத்தி பவனி வந்தவர்கள்
## தேர்க்காலில் கட்டி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிடும் திரு அல்பிரட் ரி. துரையப்பா குருநகரில் நேற்று இரவு தம்மை ஆதரித்து நடந்த பிரசாரக கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ்மாநகரசபை அங்கத்தவர் திரு எம். எஸ். யாழ் மாநகரசபை அங்கத்தவர்கள் எம். ஷி. பஷிர் எம். ஏ. சி, எஸ். காதர், கே. வ. தெய்வேந்திரன் திரு எஸ் மகாதேவா பி. காங்கேசு ஆர். நவரத்தினம் திருமதி ஆர். சவரிமுத்து உடபடப் பலரும் பேசினர்.

(கு. வி ம

# 'காங்கிரஸை இணைத்து யு.என்.பி. அரசுஅமைக்கு'

யாழ்ப்பாணம், திங்கள்

'எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி 80 இடங்களைக் கைப்பற்றும். அரசாங்கம் அமைக்கக்கூடிய பெரும்பான்மையை ஐக்கிய தேசிய கட்சி பெற்றுலும், தமிழ்காங்கித்ஸையும் சர்த்துத்தான் அரசாங்கத்தை அமைக்குமெ.

கொடிகாமம் சந்தையில் சாவகச்சேரி தமிழ் காங்கிரஸ் வேட்பாளர் திரு வே குமாரசாமியை ஆதரித்து நடந்த பிரசாரக் கூட்டத்தில் செனட்டர் ரணசிங்கா பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

திரு ஆ. கனகரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் செனட்டர் ரணசிங்கா மேலும் கூறியதாவது:

கடந்த தேர்தலில் தமிழரசு கட்சியினர் பின் கதவினால் வந்து மந்திரிபதவி பெற்றார்கள் எதிர்வரும் தேர்தலின்பின், தமிழ் காங்கிரஸ் தலைவர்களுக்கு முன் கதவினால் மந்திரி பதவி வழங்க தயாராக இருக்கிறோம்.

இந் நாடு சுதந்திரம் பெற்ற நாள்முதல் ஜனநாயகத்தை காப்பாற்றவும், நாட்டை முன்னேற்றவும், ஐக்கிய தேசிய கட்சியுடன், தோளோடு தோள்நின்று உழைத்து வரும் ஒரே ஒரு கட்சி தமிழ் காங்கிரஸ்தான். இதனை சிங்கள மக்கள் மறுத்து விடவில்லை. தேசியஐக்கியத்தையும், ஒற்றுமையையும் நிலைநாட்ட வேண்டுமானால் தமிழ் பேசும் மக்கள் தமிழ் காங்கிரசை ஆதரிக்க வேண்டுத்

முன்னால் அட்டோர்னி ஜெனரல் ஏ சி.எம். அமீர் பேசுகையில் முஸ்லிம் மக்களுக்கென ஒரு பல்கலைக்கழகம் வேண்டும் என்ற பிரேரணையை தமிழ் காங்கிரஸ் தலைவர் ஆதரித்ததை முஸ்லிம் மக்கள் மறந்துவிடமாட்டார்கள். இந் நாட்டில் வாழும் சிறுபான்மை இனத்தவர்கள் நாட்டின் எபபகுதியிலும், கௌரவத்ததுடன் வாழக்கூடய நிலைமையை ஏற்படுத்தியது ஐக்சிய தேசிய கட்சிதான். அக் கட்சிக்கு பக்கபலமாக இருந்து வரும், தமிழ் காங்கிரஸை ஆதரிக்க வேண்டும், என்றார்.

# 'இஸ்ரேலுக்கு ஆதரவாக இருந்தார் ஜி. ஜி.

## அதனால் ஐ. நா. செல்லவில்லை'

யாழ்ப்பாணம், திங்கள்

'இஸ்ரேலுக்கு மறைமுகமான ஆதரவாக திரு. ஜி ஜி. இருந்தார் என்ற கருத்து நிலவியதாலேயே அவர் கடந்த தடவை ஐ.நா.வுக்குச் செல்லவில்லை. இது சம்பந்தமாக அரசுக்கும் இவருக்குமிடையில் கருத்து வேறுபாடு இருந்தது'.

இவ்வாறு யாழ்ப்பாணம் ஜின்னா மைதானத்தில் யாழ்ப்பாணத்தொகுதி தமிழரசுக கட்சி வேட்பாளர் திரு சி. எக்ஸ். மார்ட்டனை ஆதரித்து நடந்த பிரசாரக் கூடடத்தில் திரு வி. தர்மலிங்கம் கூறினார்.

திரு அபுசாலி தலைமையில் நடந்த இக் கூடடத்தில், திரு வி. தர்மலிங்கம் தொடர்ந்து பேசுகையில், திரு ஜி.ஜி. பொன்னம்பலம் தமிழினத்தையே ஏமாற்றுகிறார். ஆனால், திரு அல்பிரட் துரையப்பா தனிநபர்களை ஏமாற்றுகிறார். இருவருமே ஏமாற்றுககாரர்களாக இருககிறார்கள்: தமிழினத்துகாக உண்மையாக உழைப்பவர்களான தமிழரசாரை அனுப்பி வையுங்கள்' என்றார். மற்றும் பலர் பேசினர்.

# ரூபா 12 கோடி 80 லட்சம்

கொழும்பு, ஞாயிறு

இலங்கைப் போககுவரத்துச்சபை மககளுககுச்சிறந்த பஸ் சேவையை அளிகக இவ்வருடத்தில் 12 கோடி 80 லடசம் ரூபாயை ஒதுகக வுள்ளது.

போது அசம்பாவிதங்கள் ஏற்படாதவாறு கண்காணிப் வாக்களிப்பு நிலையங்களுககு செல்கின்றனர் அசம்பாறும் பொலிஸ் அதிபர் அறிவித்துள்ளார்.

நாடுபூராவுமுள்ள 145 தொகுதிகளில் 5600 வாககுச்சாவடிகளில் வாக்களிபபு நடைபெறும். தேர்தல் நிலையங்களில் கடமையாற்றும் அரசாங்க ஊழியர்கள் அனைவரும் இன்று மாலைக்கிடையில் அவ்வவ் இடங்களை வந்தடைவர் கூட்டுத்தாபனம், அரசாங்க திணைக்களங்கள் ஆகியவற்றில் கடமையாற்றும் சுமார் 65 ஆயிரம் ஊழியர்கள் நாளை கடமையில் ஈடுபடுவர்.

# ஆட்சி தொடர்ந்தால் வேலை நிறுத்தம்

கொழும்பு, செவ்வாய்

தற்போதய அரசாங்கம் நாளைய தேர்தலில் வெற்றி பெறமல் தோல்வியடைந்து வெற்றியீட்டும் கட்சியிடம் ஆட்சியை கையளிப்பதற்கு மறுககும் பட்சத்தில்பொது வேலை நிறுத்தம் ஒன்றைச் செய்வதுபற்றி எதிர்க்கட்சியைச் சேர்ந்த தொழிற்சங்கங்கள் ஆராய்ந்து வருகின்றன. இதுபற்றிய முடிவு இன்று எடுக்கப்படும் என தொழிற்சங்கத்தலைவர் ஒருவர்தெரிவித்தார்: இலங்கை வர்த்தக ஊழியர்சங்கம்இப்படியான தீர்மானம்ஒன்றை ஏற்கனவே நிறைவேற்றியிருப்பதுதெரிந்ததே.

(சி. பி. ஏ.

# வாக்காளருக்கு உதவுக! பொலிஸ் அதிபர் மாநாடு இன்று கூட்டுகிறார்

**தேர்தல் சட்டத்தை அமுல் செய்யும் படியும், அசம்பாவிதங்களை ஏற்படுத்வோர் மீது கடும்நடவடிக்கை எடுக்கும் படியும் வாக்காளருக்கு போதிய உதவி செய்யுமாறும், பாகுபாடின்றிக் கடமையாற்றுமாறும் இன்றுமாலை யாழ்ப்பாணம் விளையாட்டரங்கில் நடைபெறவிருக்கும் பொலிஸ் உத்தியோகஸ்தர் மகாநாட்டில் வடபகுதி பொலிஸ்அதிபர் திரு. ஆர்.சுந்தரலிங்கம் கேட்டுக்கொள்ளவிருக்கிறார்.**

தேர்தல் தினத்தன்று வடபகுதியிலுள்ள 11 தொகுதிகளில் கடமையாற்றும் 640 பொலிசார்இம்மகாநாட்டில் கலந்துகொள்வார்கள்.

தேர்தல் தினத்தன்று பொலிஸ் உத்தியோகத்தர்கள் நடந்துகொள்ளும்விதம் பற்றி பொலிஸ் அதிபர் இம்மகாநாட்டில் விளக்குவார்.

ஒவ்வொரு தொகுதியிலும் ஆயுதம் தாங்கிய 6 பொலிஸ் கோஷ்டியினர் கடமையாற்றுவார்கள். இன்றுமுதல் 28-ம் தேதி வரை ஒவ்வொரு தொகுதியிலும்கடமையாற்றுவதற்கு கீழ்க்காணும் இன்ஸ்பெக்டர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம்- திரு. மாணிக்கம், நல்லூர்- திரு. சுவேந்திரன், கோப்பாய்- திரு. கே துரைசிங்கம், உடுவில்- திரு. புசல்ல, ஊர்காவற்றுறை- திரு. ராஜேஸ்வரன், சாவகச்சேரி- திரு இளையபெருமா, வட்டுக்கோட்டை- திரு. ராஜகுலசிங்கம், உடுப்பிட்டி- கே. ச்ந்தையா, பருத்தித்துறை- திரு. விஜேந்திரா, காங்கேசன்துறை- திரு. ஜேக்கப், கிளிநொச்சி- திரு. ஆர். சான்டர்ஸ்.

பல இடங்களில் சாரயப் போத்தல் பதுக்கி வைக்கப் பட்டிருப்பதாக பொலிசாருக்கு தகவல் கிடைத்திருப்பதாகவும் பொலிஸ் கோஷ்டியினர் இன்றுமுதல் கடைகளிலும் வீடுகளிலும் திடீர் சோதனை நடத்துவார்களென்றும் சட்டவிரோதமாக சாராயம் விற்பவர்கள் மீதும், பொலிஸ் கண்காணிப்பு அதிகரிக்கப்பட்டிருப்பதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன

# கொழும்பில் தேர்தல் முடிவுகள்

கொழும்பு, திங்கள்

தேர்தல் தினத்தன்று வாக்களிப்பு முடிவடைந்து கொழும்புக் கச்சேரியிலும் றெஜிஸ்டிரார் ஜெனரல் அலுவலகத்திலும் வாக்குச் சீட்டுகள் எண்ணப்படும் வரை கொழும்பு கோட்டை புறக் கோட்டைப் பகுதி பொதுமக்களுக்கு மூடப்பட்டிருக்கும். காலிமுகத் திடலிலும் பிரைங்பார்க்கிலும் ஒலிபெருக்கிகள் மூலம் தேர்தல் முடிவுகளை மக்கள் கேட்கலாம்.

(சி. பி. ஏ.)

## கைது செய்யப்படுவர்

இன்றுவாகனங்களில் தேர்தல் சுலோகங்களையோ அல்லதுமாற்று கட்சிகளைத்தாக்கியோ, அல்லது தங்கள் அபட்சகரின் பெயரைக் கோஷித்தோ செல்பவர்கள் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு, தேர்தல் முடியும் வரை பொலிசில் தடுத்து வைக்கப் படுவர்களென்றும் இவர்கள் (வாக்கெடுப்பில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் வடபகுதி பொலிஸ் அதிபர் அறிவித்துள்ளார்

— —

கொழும்பு, ஞாயிறு

வாக்குச் சீட்டுகள் எண்ணும் நிலையங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர் நீளக்கை சேட் அணிவதை பாதுகாப்பு நடவடிக்கையாக தேர்தல் கமிஷனர் தடை செய்துள்ளார். தேர்தல் கமிஷனர், உத்தியோகத்தர், சீட்டுக்கள் எண்ணும் நிலையத்திற்கு பேப்பர், பென்சில், பேனை ஆகியவற்றையும் தடைசெய்துள்ளார்.

தவறணைகள், நாளைமுதல் 28ம் தேதிவரை மூடப்பட்டிருக்கும் தேர்தல் பிரசாரங்கள் நாளை இரவுடன் முடிவடைந்துவிடும். (சி. பி ஏவைத்தார்.

# தேர்க்காலில் கட்டி அடிக்க முற்படுகிறார்கள்"

மாவிட்டபுரம், திங்கள்

"சேர். பொன் இராமநாதனை அலங்கார தேரில் இருத்தி பவனி கொண்டு சென்ற சிங்களத்தலைவர்கள் இன்று தமிழரை தேர்ச்சக்கரத்தில் கட்டி இழுக்க துணிகிறார்கள். இந்த துணிச்சலை சத்தியாக்கிரகம் மூலம் தமிழரசுக்கட்சியே ஏற்படுத்தியது".

இவ்வாறு மாதகல் மேற்கில் நடைபெற்ற தமது பிரசாரக் கூட்டமொன்றில் ஈழத்தமிழ் ஒற்றுமை முன்னணி தலைவர் திரு. செ. சுந்தரலிங்கம் கூறினார்.

திரு என். நடராசா தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் சிங்கள கட்சிகள் தமிழர்களை கோழைகள் என கருதிக்கடந்த 14 ஆண்டுகளாக ஒரு உரிமையும்கொடுக்காமல் ஏமாற்றி வந்தன. தமதுதேர்தல்பிரசாரங்களில் அரசு அமைக்கும் முயற்சியில் தமிழரசார் தமக்கு இடம் கிடைக்கும் என தெளிவாக தெவிக்கின்றனர் மக்கள் கொடுத்த அதிகாரத்தை சிங்கள அரசு அமைக்க மாத்திரமே தமிழரசார் உதவுகிறார்கள். தமிழர் உரிமைகளை இவர்களால் எடுத்து தரமுடியாது.

சமயம், பாஷை, பூமி, கலாசாரம் போன்றவற்றின் பூரண சுதந்திரம் பெறுவதற்காகப் போராட வேண்டும். தம்மைதாமே ஆளக்கூடிய ஒரு முறையை ஏற்படுத்தினாலன்றி தமிழ் மக்கள் முன்னேற வழி காண முடியாது. இதற்கு தனித் தனித் தமிழரசே சிறந்த வழி. தனித் தமிழரசு அமைக்க சாம, பேத, தான, தண்டம் என்ற வழிகளை கையாளவேண்டும்.

சிறுபான்மையினர் என்னை தமது விரோதி எனகருதுகிறார்கள்.

ஒரு தொகுதியில் போட்டியிடும் போது நான் அத் தொகுதியிலுள்ள எல்லா சமையத்துக்கும். சாதியாருக்கும் உரிமையுடைய வன் என்றேகருதுகிறேன்.

மற்றும் திருவாளர்கள் த. சிவலிங்கம், க. கதிரமலையான், பிரம ஸ்ரீ. து. சண்முகநாதக்குருக்கள் உட்பட பலர்உரையாற்றினார்கள்.

# 1000 ரூபா பிணையில் அனுமதி

முல்லைத்தீவு, திங்கள்

'கடந்த வாரம் ஒட்டிசுட்டானில் வைத்து தபால் விநியோகஸ்தரான இராமலிங்கம் சங்கரப்பிள்ளை என்பவரை இ. போ. ச. பஸ்ஸினால் மோதியதாகவும் அதனால் அவர் மரணமடைந்ததாகவும் றிமாண்டில்வைக்கப்பட்டிருந்த சாரதி கே. நடராசா நேற்று முல்லைத்தீவு நீதிபதி திரு. திசநாயக்கா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். நீதிபதி சாரதியை ரூபா 1000 பிணையில் செல்ல அனுமதித்து மேல்விசாரணையை அடுத்த மாதம் 20ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

# 'ஒருநாள் கடைகளைப் பூட்டுக'

யாழ்ப்பாணம், செவ்

கிளிநொச்சி, பரந்தன் கடைச்சிப்பந்திகள் வாரத்தில் ஒருநாள் கடைகளைப் பூட்டும்படி முதலாளி மார்களைக்கோரி பொதுகூட்டம் ஒன்றை நடாத்த ஒழுங்கு செய்துவருகின்றனர்.

கிளிநொச்சி பரந்தன் ஆகிய இடங்களில் உள்ள கடைகள் இரவு 10 மணிவரை திறந்து வைக்கப்படுகின்றனவென்றும் கடைச்சிப்பந்திகள் காலை 6தொடக்கம் இரவு 10 மணிவரை வேலைசெய்ய வேண்டியுள்ளதென்றும் கடைச் சிப்பந்திகள் கூறுகின்றனர்.

இதை எதிர்த்து சிப்பந்திகள் சிலர்கடைமுதலாளிகளிடம் ஆட்சேபம் தெரிவித்ததைத் தொடர்ந்து இம் மாதம் 3ம் 10 திகதிகளாகிய ஞாயிற்றுக் கிழமைகளில் ஒரு சில கடைகள் பூட்டப்பட்டுத் தொழிலாளருக்கு லீவு வழங்கப்பட்டதாம். ஆனால்பெரும்பாலான கடைகள் அதே தினங்களில் திறக்கப்பட்டிருந்ததால் ஞாயிற்றுக் கிழமைகளில் கடைகளைப் பூட்டிய கடைச் சொந்தக்காரர் கடந்த 13ந் திகதி ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் மீண்டும் திறந்துவைத்துள்ளனர். இதுவே எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு காரணம் என்று கூறப்படுகின்றது.

( கு வி ம)

# ப. சபையை அமைத்தவர் கா. பொ. தான்

விஸ்வமடு திங்கள்

"கிளிநொச்சித் தொகுதியில் பட்டினசபை ஒன்றை உடுவாக்கினால், நிச்சயம் கிராமப் புறத்தில் உள்ள ஏழை மக்கள் பாதிக்கப்படுவார்கள்என்று எண்ணி அதை நான் வன்மையாக எதிர்த்தேன். ஆனால் என்கூற்றை எதிர்த்துகிளிநொச்சிமுன்னைநாள் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. க. பொ. இரத்தினம் பட்டினசபையை அமைத்தார்". என தர்மபுரம் 11-ம் புளக் சந்திக்கண்மையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கிளிநொச்சித் தமிழ்க்காங்கிரஸ் வேட்பாளர் திரு. ஆனந்தசங்கரி

— —

## அரசாங்கத்தை துவக்குகளால் அல்ல வாக்குகளால் வீழ்த்தவேண்டும்

மாத்தளை, திங்கள்

"ஒரு அரசாங்கம் வாக்குகளால் வீழ்த்தப்படவேண்டுமேயொழிய துவக்குகளால் அல்ல. எங்களுக்குத் துவக்குகளில் நம்பிக்கையில்லை." என மாத்தளை மாவட்டத்தில் நடைபெற்ற பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றிய திருமதி பண்டாரநாயகா கூறினார்

மக்களின் வாக்குகளில் எனக்கு நல்ல நம்பிக்கையுண்டு. இந்தத்தடவை நிச்சயமாக மக்கள் எங்களையே ஆட்சியமைக்க அனுப்பி வைப்பார்கள். முதலாளி வர்க்கத்தினரின் சாகசங்கள் யாவும் மக்கள் அறிந்துவிட்டார்கள. ஐ. தே. கட்சியினர் தொடர்ந்தும் மக்களை ஏமாற்றமுடியாது என்றும் அவர் கூறினார்.

# கும்பாபிஷேகம்

வல்வெட்டித்துறை, செவ்'

அல்வாய் வேவிந்தை முத்துமாரி அம்மன்கோவில் கும்பாபிஷேக இளைஞர் விழா இன்று நடைபெறவிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏல விற்பனை

யாழ்ப்பாணம் 91, கஸ்தூரியார் வீதி 'சந்திரா' அடைவுகடையில் 1-1-69-ம் திகதிக்கு முன் வைத்த நகைகளில் மீட்கப்படாதவை 23-6-70 செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்குக் கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை
ஏல விற்பனவாளர்.
2280

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

புளியடிக் கடைத் தெரு அருகாமையில் ஐந்து பரப்பு வளவும் வீடும் மிக நல்ல தண்ணீர்க்கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். R. P. செல்வத்துரை, ''இந்திர வாசா'' சித்தன்கேணி. 2251

### கல்வி

ஜீ. சீ. ஈ. கலை/விஞ்ஞான/ வர்த்தக/ சிங்கள (காலை/ மாலை) வகுப்புகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. யாழ்ப்பாண டியூடோறியல் கல்லூரி (Jaffna Tutorial College) 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 2258

### WANTED

Wanted DOCTORS for Temporary appointment to Co-operative Hospital, Moolai, Chulipuram. Salary and Allowances at Govt. rates. Apply to President before 7-6-70. Specialists need not apply. 2257

### EDUCATION

City & Guilds
Electrical Engineering Practice Preliminary, Intermediate & Final Parts I and II. Class commencing in June. Apply early. Advt. No. 2256 C/o EELANADU, JAFFNA 2256


# 'நம்மிடையே சமணர்கள் இன்றும் இருக்கிறர்கள்'

சித்தன்கேணி, திங்கள்

''நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தருடைய சிவஞானம் செறிந்த வாழ்வு, பண்பாடு, தெய்வ பக்தி முதலான யாவும் பெற்று, நல்ல நிலையில் வாழ்ந்து நன்நிலை எய்தவேண்டும். திருஞானசம்பந்தரது உயர்ந்த சீரிய வாழ்வைப் பின்பற்றி மாணவர்கள் வாழ்ந்தால் எதிர்காலத்தில் சுபிட்சமான சமுதாயம் உருவாகும் என்பதற்கு ஐயமில்லை.''

வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில், 'வள்ளியம்மை' மண்டபத்தில் நடைபெற்ற திருஞானசம்பந்தர் குருபூசையில் தலைமைவகித்துப் பேசுகையில் மேற்படி கல்லூரி அதிபர் திரு. க. கயிலாயநாதன் இவ்வாறு குறிப்பிட்டார்.

வட்டுகோட்டை இந்துக் கல்லூரி விரிவுரையாளர் பண்டிதர் த. சுப்பிரமணியம் பேசுகையில் ''இறைவனுடைய திருவருள் கைவரப்பெற்ற பெரியோருக்குத் தீங்கு செய்பவர்கள், தீங்குசெய்ய முனைந்து நிற்பவர்கள் எவரும் அத்தீமைகளுக்கு ஆளாகித் துன்பத்தில் வருந்துவார்கள். திருஞானசம்பந்தரை தமது எதிரியாகக் கருதிய ஆனைமாமலை முதலான இடங்களிலுள்ள சமணர்கள், தமது செல்வாக்கையும், மதத்தையும் நிலைநாட்டும்பொருட்டு பல சூழ்ச்சிகளைச் செய்த போதும் திருவருள் துணையினால் அவை தோற்றுப் போயின. சமணத்தில் மூழ்கியிருந்த பாண்டியனையும், நாட்டையும் மீட்டுச் சைவத்தை நிலைநாட்டினர் திருஞானசம்பந்தர்.

இன்றும் நமது சமுதாயத்தில் பல சமணர்கள் இருந்து, சைவத்துக்கும், தமிழுக்கும் பெரும் தீங்குகள் புரிவதையே தொழிலாகக் கொண்டுள்ளனர். ஆனல் தெய்வ அருள் உண்டென்னும் அன்பர்கள், அடியார்களுக்குத் தக்க தருணத்தில் திருவருள் முன் வந்து உதவிபுரியும்'' என்றார்.

மாணவ, மாணவிகளின் கூட்டுப் பிரார்த்தனையும் இடம்பெற்றது.

### கலைநகரில்

''சமணம், பௌத்தம் ஆகிய பல சமயங்கள் தலைதூக்கிநின்று. மெய்ச் சமயமான சைவ சமயத்தை அழித்துவிட முயன்ற காலத்தில் சீர்காழியில் சிவபாதவிருதயருக்கும், பகவதியாருக்கும் குழந்தையாக அவதரித்தார் ஞானசம்பந்தர். மூன்ருவது வயதில் இறைவன் இறைவியரால் ஆட்கொள்ளப்பட்டமையால் ஆளுடையபிள்யார் எனவும், உலகமாதாவாகிய உமையம்மையால் ஞானப்பால் ஊட்டப்பெற்றமையால் ஞானசம்பந்தர் எனவும் பெயர்பெற்றார்'' எனச் சித்தன்கேணி கலைநகர் நேருஜி சனசமூக நிலைய முன்றலில் நடைபெற்ற திருஞானசம்பந்தர் குருபூசையில் சிறப்புரையாற்றிய வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி விரிவுரையாளர் திரு. இ. கருணாநிதி குறிப்பிட்டார்.

மேற்படி சனசமூகநிலையத் தலைவர் சைவப்புலவர் திரு. நா. தங்கரத்தினம் தலைமையில் இக்குருபூசை நடைபெற்றது.

''சிறுவனாக இருந்த சம்பந்தர், கொடிய செயல்களைக் கட்டவிழ்த்துவிடுவதில் வல்ல சமணர்கள் மத்தியில் இறையருள் கைவரப் பெற்று, அவர்களுடன் வாதிட்டும், அற்புதங்கள் பல செய்தும் சமணர்களைத் தோற்கடித்து, சைவத்தையும், தமிழையும் வளர்த்து உலகில் நிலைத்துநிற்கச் செய்தவர். இத்தகைய நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன், அப்பர் முதல் தாயுமானவர் வரை போற்றப் பட்டவர்'' என அவர் மேலும் தமதுரையில் குறிப்பிட்டார்.

விழாவின்போது சனசமூக நிலையத்தினரின் பஜனையும் இடம்பெற்றது. செயலாளர் முருக. நல்லசேகரம் பிள்ளை நன்றி கூறினர்.

— —

## நேருஜி வெற்றி

சித்தன்கேணி, திங்கள்

சித்தன்கேணி கலைநகர்

# இரத்தத்திலகம் இட்டனர்

மட்டுவில், திங்கள்

சாவகச்சேரி தொகுதியில் கச்சாய், மறவன் புலவு ஆகிய இடங்களில் நடைபெற்ற தமிழரசுக் கட்சி பிரசச்சாரக் கூட்டத்தில் சாவகச்சேரி வேட்பாளர் திரு. வி என். நவரத்தினத்திற்கு 30 க்கும் அதிகமான வாலிபர்கள் இரத்தத்திலகமிட்டனர்.

# இன்றைய பலன்

வைகாசி மீ 12-ம் திகதி
[26-5-70]

**மேஷம்-** கொள்வனவுகளில் நல்ல திருப்பம் ஏற்படும். வணிகர்களுக்கு வியாபார விருத்தி உண்டு. கல்வித்துறையில் முன்னேற்றம் தென்படும்.

**ரிஷபம்-** புத்திக் கூர்மையுடன் புதிய எண்ணங்கள் தலைதூக்கும். புத்திரர்களால் புகழும் கிடைக்கும். இறைநம்பிக்கையுடன் இல்லத்தில் அமைதி தவழும்.

**மிதுனம்-** எதிர்பாராத முடிவுகள் ஏமாற்றத்தைத் தரலாம். பழைய நினைவுகள் துன்பத்தைக் கொடுக்கும். தனிவழிப் பயணத்தை தவிர்த்தல் நன்று.

**கடகம்-** சமயோசிதபுத்தி உங்களுக்குத் தாராளமான சித்திகளைத் தேடித்தரும். மக்கள் மூலம் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம் பெறும்.

**சிம்மம்-** கழுகுப் பார்வை வட்டமிடும். கடமையில் தடைகள் ஏற்படும். முடிந்த வரையில் வழக்குவிவகாரங்களை இன்று தவிர்த்துக் கொள்ளவும்.

**கன்னி-** கட்டிவெல்லம் போல் இனிக்கும்வாழ்க்கை. இனபந்துக்களின் ஆதரவு கிடைக்கும். எதிர்பார்த்த வரவிலும் திருப்தி ஏற்படும்.

**துலாம்-** உணர்ச்சிப் போராட்டங்கள் இன்று தலைதூக்கும். எதிர்பாராதவிதமாக தோல்வி ஏற்படலாம். எக்காரியத்தையும் இன்று ஆரம்பிக்காது இருக்கவும்.

**விருச்சிகம்-** வீட்டில்மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் நடைபெறும். விருந்துபசாரங்களும் உண்டு. சிலருக்கு வாகனஇலாபமும் கிடைக்கலாம். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றமுண்டு.

**தனுசு-** கருப்பு பார்வை உங்களை வட்டமிடும். எதிர்பாராதமுறையில் பொருட்

# '60க்கு 40 ஏற்றிருந்தால் இன்று இந்நிலை இராது'

வல்வெட்டித்துறை திங்கள்

''தமிழர் உரிமைக்காகப் போராடியதும் போராடிக் கொண்டிருப்பதும் தமிழரசுக்கட்சி இக்கட்சி உருவாகிய காலம் தொட்டு இன்று வரையும் தமிழ்மக்கள் இதில் நம்பிக்கை வைத்திருக்கிறர்கள். இக்கட்சியின் வளர்ச்சி கண்டுபொருமைப் பட்டு தமிழ் மக்களிடத்தில் பொய்புரளிகளைச் சொல்லி அழிக்கப்பார்க்கிறர்கள்'' என வட்டுக்கோட்டை முன்னள் எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் பருத்தித்துறைத் தொகுதி தமிழரசுக்கட்சி வேட்பாளர் திரு. க. துரைரத்தினம், உடுப்பிட்டி வேட்பாளர் திரு க. ஜெயக்கொடி, கோபாய் வேட்பாளர் திரு. எஸ். கதிரவேற்பிள்ளை ஆகிய மூவரையும் ஆதரித்து நடந்த தேர்தல் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையில் கூறினர்.

தொண்டமானறு சின்னக் கடற்கரை மைதானத்தில் திரு. த. நல்லதம்பி தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு க ஜெயக்கொடி பேசுகையில் கூறியதாவது.

டொனமூர் ஆணைக்குழுவினர் இலங்கைக்கு வந்த போது அவர்கள் பலதிட்டங்களை வெளியிட்டனர். அந்த நேரத்தில் தமிழ் மக்களின் தலைவராகவிருந்த திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம் 50க்கு 50 கேட்டார். அவர்கள் அதுதரமுடியாதெனக் கூறி 60 க்40 தரலாமெனக் கேட்டபோது திரு பொன்னம்பலம் அதனை ஏற்க மறுத்து விட்டார். அந்த நேரச் சூழ்நிலைக்கு ஏற்ப திரு பொன்னம்பலம் அதனை ஏற்றிருந்தால் இன்று தமிழ் மக்களுக்கு இவ்விதமான இக்கட்டான நிலை ஏற்பட்டிருக்காது. பின்னர் சோல்பரி ஆணைக்குழு வந்து திரு. பொன்னம்பலத்தின் கோரிக்கைகளை நிராகரித்து விட்டு ஒற்றையாட் திட்டத்தை வகுத்துக் கொடுதுவிட்டு சென்றது. அந்த நேரத்தில் திரு. ஜீ ஜீ தமிழ் மக்களின் நன்மைகளில் கவனம் செலுத்தவில்லை, இலங்கைத் தமிழ் மக்கள்சமஷ்டி ஆட்சி மூலம் தான் நன்மைபெற முடியும்

திரு க துரைத்தினம் பேசுகையில் தமிழரசுக்கட்சி மீது இதர தமிழ்க் கட்சிகள் தொடக்கம் தென்னிலங்கை கட்சிகள் யாவும் வசைபாடத் தொடங்கியுள்ளன. உரிமைகளைக் கேட்கும் எமது கட்சிமீது சிங்களக் கட்சிகள் வசைபாடுவதுபோல தமிழ்க் கட்சிகளும் வசைபாடி வருகின்றன என்றார்.

''நாம் ஆட்சிக்கு வந்தால்......

# அத்தியாவசிய பொருட்களின் விலையைக்குறைப்போம்''

பண்டத்தரிப்பு, திங்கள்

''தென்னிலங்கையில் இரு பெரும் அரசியல் கட்சிகளுக்கிடையே பெரிய அரசியல் போட்டி நடைபெறுகிறது. பிற்போக்குச் சக்திகளான ஐ. தே. கட்சிக்கும் சிறிலங்கா சுதந்திரககட்சிக்குமிடையில் தான் இப் போட்டி நடைபெறுகிறது. ஒருவிளையாட்டைப் போல் தமிழரசார் இதனைத் தூர நின்று பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.''

இவ்வாறு இளவாலை நாவலர் கோவிலடியில் கம்யூனிஸ்ட் வேட்பாளராகப் போட்டியிடும் திரு. வி. பொன்னம்பலத்தை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்தில் திரு. பீட்டர் கெனமன் பேசுகையில் குறிப்பிட்டார்

''அன்று 1 ரூபாவிற்குவாங்கிய பொருளை இன்று 1 ரூபா 83 சதம் கொடுத்தால் தான் பெறமுடியும், கூட்டணி ஆட்சிக்கு வந்தால பாலுணவு. துணிவகைகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலையை நாம் கட்டுப்படுத்த எண்ணியுள்ளோம். இனக்கலவரத்தை தூண்டுவோர் இலங்கையின் எப்பகுதியில் இருந்தாலும் அவர்கள் மீதுகடும் நடவடிக்கை எடுப்போம்' என திரு. கெனமன் சொன்னர்.

மற்றும்பலர் பேசினர்.

# 'சிங்களக்கட்சிகளுக்கு தமிழரே ஆதரவு; நானல்ல'

# 'வடக்கிலும், காலியிலும் இரு பல்கலைக்கழகங்கள்'

## ஜனநாயக சோஷலிசக் கட்சி தேர்தல் விஞ்ஞாபனம்

கோட்டை, திங்கள்

''யாழ்ப்பாணத்திலும், காலியிலும் இரு பூரணத்தும் வாய்ந்த பல்கலைக்கழகங்களை உடனடியாக நிறுவும்படி அரசாங்கத்தை வற்புறுத்துவோம். இலங்கையின் வடக்கு. கிழக்கு தெற்குப் பகுதிகளைச்சேர்ந்த பல ஆயிரம் மேற்படிப்பு மாணவர்களின் அவசர கல்வித்தேவைகளைப் பூர்த்தி செய்ய இப்பல்கலைக்கழகங்கள் அவசியமானவை.

வடக்கே கைப்பற்றப் பட்ட பகுதிகளாகக் கணிக்கப்பட்டு. அங்கே அமர்த்தப்பட்டுள்ள இராணுவத்தை அகற்றும்படி கோருவோம்''

ஜனநாயக சோஷலிசக் கட்சி தேர்தல் விஞ்ஞாபனத்தில் இவ்வாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

கொழும்புதெற்குத்தொகுதியில் போட்டியிடும் கட்சியின் தலைவரான திரு. இரத்தினசபாபதி விஜயஇந்திரன் தமது தேர்தல்விஞ்ஞாபனத்தில் மேலும் கூறியுள்ளதாவது:

இலஞ்ச ஊழல்களை ஒழித்துக்கட்டுவதற்கு. குற்றவாளிகளுக்கு பகிரங்கக் கசையடி, பிரசித்தப்படுத்தல் இழிவாகப்பெற்றசொத்துக்களைப் பறிமுதல் செய்தல், கடுழியச்சிறைவாசம் ஆகியன உட்படக் கடுந்தண்டனை வழங்கவேண்டும்.

சிற்றூழியருக்கு மாதம் ரூபா 300 வது சம்பளம் வழங்கி எமது கட்சி ஆவன செய்யும் நாம் தெரிவுசெய்யப்பட்டால், ஆட்சியில் இருக்கும் அரசங்கத்துக்கு தேசிய நலன்கருதியும், பொதுமக்களின் நலன்கருதியும் ஆதரவு கொடுப்போம்.''

# 'இளைப்பாறிய பின்னரும் சேவை செய்ய வேண்டும்'

## ஓய்வு பெறும் உரும்பராய் இந்து அதிபர் உரை

உரும்பராய், திங்கள்

''ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்ருேர்கள் சேர்ந்த ஒரு கூட்டுநிர்வாகத்தின் மூலமும் பரஸ்பரம்ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பதன் மூலமும் கல்வியை முன்னேற்றி பாடசாலை நிர்வாகத்தை திறம்பட நடாத்தலாம்''

உரும்பராய் இந்துக் கல்லூரியில் சென்ற 12 வருடங்களாக அதிபராகஇருந்து இன்று ஓய்வுபெற்ற திரு. ஏ. வைத்திலிங்கம் நேற்று தமக்கு கல்லூரி ஆசிரியர்களால் அளிககபபட்ட பிரிவுபசார தேநீர் வைபவத்தின்போது மேற்கண்டவாறு கூறினர்

ஆசிரியர் திரு எஸ் ஐயாத்துரை தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இப்பிரிவுபசார விழாவில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

எந்தவொரு மனிதனும் எந்த ஒரு திட்டத்தை கைக்கொள்ளும்போது எதற்காக செய்யவேண்டும்? இதனல் வரும்பலாபலன்கள் என்ன என்ற கேள்விகளை மனதிலே எழுப்பி இதற்கு திர்வுகண்ட பின்னரே அதைச்செய்யமுற்படவேண்டும். இதனல் சிறப்புற்ற, மனம்நோகாத வாழ்க்கையை தனது வாழ்நாளில் அமைத்துக்கொள்ள

...ல் தான் வெற்றிகிடைக்கும் என்ற நம்பிக்கையுடையவர். அகங்காரமற்றவர். தற்பெருமை தானறியாத் தலைவர், விருப்பு வெறுப்பு அற்றவர் கல்லூரியின் வளர்ச்சியே தன்வளர்ச்சி என்ற முற்போக்குடையவர் இளம் வயதிலேயே கம்யூனிச கொள்கையில் பற்றுடையவர் திரு. வைத்திலிங்கம் ஆசிரியர் என்றும் இவரைப்பாராட்டிப் பேசிய வடமாகாண ஆசிரியர் சங்கத்தலைவர் திரு சிவநேசன், வலிகிழக்கு ஆசிரிய சங்கத்தலைவர் திரு. முத்துலிங்கம் திரு. எஸ். சபாநாயகம், திருமதி ரட்ணசிங்கம், திரு. நவரத்தினம் ஆகியோர் குறிப்பிட்டனர்.

— —

## பாராட்டு

சித்தன்கேணி, திங்கள்

'முதலாம் வகுப்பிலிருந்து மூன்ரும் வகுப்புவரையும் 2 உதவி ஆசிரியர்களுடன் இயங்கிவந்த நிலையைமாற்றி அமைத்து. 7-ம் வகுப்புடன் 6 ஆசிரியர்களையும் கல்வி கற்பிக்கச்செய்தும், பாடசாலையை விஸ்தரித்தும், சிறுர்களை கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் கல்வியில்வல்லவர்களாக்கிய பெருமை


# மெக்கா யாத்திரை

55 வாரங்களாக பம்பாயிலும், பின்பு
151 நாட்கள்கொழும்பு றீகலிலும் தற்பொழுது
யாழ். றீகல்
வெண்திரையிலும் ஓடிக்கொண்டிருக்கும்

## மெக்கா யாத்திரை

யாழ். முஸ்லிம் மக்களுக்காகப் பிரத்தியேகமாகத் தருவிக்கப்பட்டுள்ளது. மெக்காவுக்குப் புனித யாத்திரை செய்ய ஆவலாயுள்ள ஒவ்வொரு முஸ்லீமும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெக்கா யாத்திரை

யாழ். முஸ்லிம் மக்களுக்காகப் பிரத்தியேகமாகத் தருவிக்கப்பட்டுள்ளது. மெக்காவுக்குப் புனித யாத்திரை செய்ய ஆவலாயுள்ள ஒவ்வொரு முஸ்லீமும் பார்த்து இன்புற வேண்டிய முழுநீள வர்ணப்படம்.



வின்ஸர் 7 வது வாரம்
யாழ்ப்பாணம் தினசரிபி.ப.2-30 6-30
சிவாஜிகணேசன் — பாரதி
மற்றும் பலர் நடித்த

## தங்கச் சுரங்கம்

(முழுநீள ஈஸ்ட்மன் கலர் சித்திரம்)

தினசரி: காலை 10-30 இரவு 9-45
ரி. ஆர். ராமச்சந்திரன்—தங்கவேலு
அஞ்சலிதேவி — கருணாநிதி
நடித்த

## அடுத்தவீட்டுப் பெண்



இன்று முதல்

## வெலிங்டன் யாழ்ப்பாணம்

தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிரிப்போயா காலை 10-30)

## எம்.ஜி.ஆர். ஜெயலலிதா நாகேஷ் ரெங்கராவ்

மற்றும் பலர் நடிந்த





ளர் முருக. நல்லசேகரம் பிள்ளை நன்றி கூறினர்.

— —

## நேருஜி வெற்றி

சித்தன்கேணி, திங்கள்

சித்தன்கேணி கலைநகர் நேருஜி சனசமூக நிலையக் கரபந்தாட்டக் கோஷ்டிக்கும், இணுவில் ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகத்திற்குமிடையே அண்மையில் நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டியில் கலைநகர் நேருஜி சனசமூகநிலையக் கோஷ்டியினர் வெற்றியீட்டினர், கலைநகர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இவ்விளையாட்டுப் போட்டிக்கு வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி ஆசிரியர் திரு இ. கருணாநிதி பி. ஏ. மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.


## வெஸ்லிசினிமா

மானிப்பாய்
தினசரி: 6-30,10-00
பிரிபோயா,போயா 2-30மணி
எம்.ஜி.ஆர். - பானுமதி
நடித்த

### அலிபாபாவும் 40 திருடர்களும்

(கேவா கலர்)



## ஸ்ரீ காலிங்கன்

இணுவில்
தினசரி 6-30-10-00 மணி
போயா, பிரிபோயா 2-30
சுந்தரராஜன்-சௌகார்ஜானகி
நடித்த

### நாணல்



## ராணி [யாழ்ப்பாணம்]

தினசரி 3 காட்சிகள்
ஷம்மி கபூர்—கல்பனா
நடித்த

### புரொபசர்

(ஹிந்தி)



## ராஜா (யாழ்ப்பாணம்)

தினசரி 2-30, 6-30, 10-00
சுனில்டட்-சரோஜாதேவி
நடித்த

### பேற்றி பேற்றி

PETI P TE
(ஹிந்தி)



## MANOHARA

JAFFNA
Daily 4-45, 7&9-45 p. m.
Poya&Public Holidays
4 shows
Mike Henry,
Jane Murray
in
TARZAN AND THE GREAT RIVER
(Scope-color)


சாரங்களும் உண்டு, சிலருக்கு வாகனஇலாபமும் கிடைக்கலாம். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றமுண்டு.

**தனுசு-** கருடப்பார்வை உங்களை வட்டமிடும். எதிர்பாராதமுறையில் பொருட்செலவுக்கு இடமுண்டு. தொழில்துறையில் மனக்கசப்பு தென்படலாம்.

**மகரம்-** முன்னேற்றம் தடைபடும். குறுக்குவழித் தலையீடு குழப்பத்தை ஏற்படுத்தலாம். எதேச்சாதிகாரப்போக்கால் சிலரைப் பகைத்துக்கொள்ளவும் நேரிடும். அமைதி நன்று.

**கும்பம்-** மேலதிகாரிகளுடன் தொடர்புகொள்ளுவதற்கு இன்று நல்லநாள், இனசனங்கள் மத்தியில் செல்வாக்கு வளரும். குடும்பத்திலும் இன்பமான சூழ்நிலை தென்படும்.

**மீனம்-** துன்பத்தின் ரேகைகள் படரும், தூக்கம்கெடும் எதிர்பார்த்ததில் தடை ஏற்படும். மனதில் ஆத்திரம் அலைமோதும்,

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### செவ். 26—5—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ. அன்ட் 61 மீ.**

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவு 8 15 இஸ்லாமிய கீதங்கள், 8-30 செய்திச் சுருக்கம்.

**344 மீ. அன்ட் 49 மீ.**

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 சித்திர கானம், 1-00 மாதர் கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ. அன்ட் 61 மீ.**

மாலை 4-25 செய்திச் சுருக்கம், 4-28 சங்கமம், 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-30 பாட்டு.

இரவு 6-15 நாட்டுப்பாடல்கள் 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கிராமசஞ்சிகை, 7-15 நாடகம், 7-45 மெல்லிசை, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 சித்திரம், 10-00 நேயர் கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.

பொன்னம்பலத்தை ஆதரித்து நடைபெற்ற கூட்டத் ... மற்றும்பலர் பேசினர்.

# 'சிங்களக்கட்சிகளுக்கு தமிழரே ஆதரவு; நானல்ல'

**— ஆர்.ஜி**

அம்பலாங்கொடை, திங்கள்

'கடந்தபொதுத் தேர்தலின்போது சிங்கள தேசத்தை முன்னேற்றுவது குறித்தே எல்லாக்கட்சிகளும் பிரச்சாரம் செய்தன. ஆனல் இம்முறை ஐக்கிய தேசியககட்சியோ அல்லது கூட்டணியோ 'சிங்களம் என்ற சொல்லையே தமதுபிரசாரக்கூட்டங்களில் குறிப்பிடவில்லை. இது இவ்விரு கட்சிகளும் தாங்கள் பதவிக்கு வருவதற்காக தமிழருடன் இரகசிய ஒப்பந்தம் செய்துள்ளன என்பதைத் தெளிவாகக்காட்டுகிறது.'

அம்பலாங்கொடைத் தொகுதியில் நடைபெற்ற தனது பிரசாரக்கூட்டத்தில் மேற்கண்டவாறு திரு. ஆர். ஜி. சேனநாயக்கா குறிப்பிட்டார்.

அவர் மேலும்தொடர்ந்து பேசுகையில், என்னை ஐ தே. கட்சியின் ஆதரவாளர் எனச்சிலர் குறிப்பிடுகின்றனர். ஆனல் இந்த இரு கட்சிகளுக்கும் தமிழர்களே ஆதரவாளர்களாக உள்ளார்களன்றி நானல்ல. சிங்களவர் இந்நாட்டில் பெரும்பான்மையினராகவிருந்தாலும் தமிழர் உதவியின்றி அவர்கள் ஆட்சியமைக்க முடியாதெனத் தமிழ்த் தலைவர்கள் வெளிப்படையாகப் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளனர்' எனக்கூறினர்.

திருவாளர்கள் பீற்றர் குணரத்ன, ஜி. டி. வீரசேன, எச். எச். சதாசேன, ரி: திலகசேன உட்படப்பலர் இக் கூட்டத்தில் உரையாற்றினர்.

# 3 மணித்தியாலங்களில் தேர்தல் முடிவுகள்?

கோட்டை, திங்கள்

கடந்த தேர்தல்களின்போது 10 மணித்தியாலங்களில் எண்ணப்பட்ட வாக்குகளை, இம்முறை 3 மணித்தியாலங்களில் எண்ணிமுடிப்பதற்கான ஒழுங்குகளை தேர்தல்அதிகாரிகள்மேற்கொண்டுள்ளனர்.

5 மணிக்கு வாக்கெடுப்பு முடிந்த பின்னரே கடந்தகாலங்களில்வாக்குகளை எண்ணுவதற்கு ஆரம்பிப்பது வழக்கம். ஆனல் வருகிற 27-ம் திகதி தேர்தலில் தபால்மூலம் அளிக்கப்பட்ட வாக்குகளை முதலில் கணக்கிடுவதற்கு சம்மதம் தெரிவிக்கும்படியும் பின்னர் தேர்தல் முடிந்தபின்னர் மிகுதியை எண்ணுவதால் நேரத்தை மூன்று மணித்தியாலங்களாகக் குறைத்துக் கொள்ளமுடியும் என்றும் தேர்தல் கமிஷனர்இம்முறை போட்டியிடும் சகல அபேட்சகர்களையும் கடிதங்கள் மூலம் கேட்டுக்கொண்டுள்ளார்,

முதலில் வாக்குகள் எண்ணும்போது அபேட்சகர்களின் பிரதிநிதிகள் பிரசன்னமாயிருக்கலாம் என்றும், இவ்விதம் செய்யப்படுவதால் இரவு 8 மணிக்கு முன்னரே தேர்தல் முடிவுகளைத் தெரிவிக்கமுடியும் என்றும் அவர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## ரூ.8,000 அபராதம் வெளிநாட்டு மாலுமிகளுக்கு

கோட்டை திங்கள்

டென்மார்க்கைச் சேர்ந்த இரு கப்பல் மாலுமிகள் கடத்தல் பொருள்களைவைத்திருந்ததையொட்டி சுங்க இலாகா அதிகாரி அவர்கள் இருவருக்கும் தலா ரூபா 8,000 அபராதம் விதித்தார். அவர்கள் வைத்திருந்த கடத்தல் பொருள்களும் கைப்பற்றப்பட்டன.

டிரான்சிஸ்டர் றேடியோக்கள் கைக்கடிகாரங்கள், உட்பட இத்தகைய பல பொருள்களை சுங்க இலாகாவினர் இவர்களிடமிருந்து கைப்பற்றினர்.

## பஸ் விபத்தில் சாரதி காயம்

முல்லைத்தீவு, திங்கள்

முல்லைத்தீவிலிருந்து கொக்கிளாய் சென்றுகொண்டிருந்த இ. போ. ச. பஸ்வண்டி முல்லைத்தீவு கொக்கிளாய் ரோட் 13வது மைலுக்கருகாமையில் உள்ள மரம் ஒன்றுடன் மோதியதன் காரணமாக சாரதியான கா. சிவப்பிரகாசம் காயங்களுடன் முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார், பிரயாணிகள் தெய்வாதீனமாக உயிர் தப்பினர்.

வரும்பலாபலன்கள் என்ன என்ற கேள்விகளை மனதிலே எழுப்பி இதற்கு தீர்வுகண்ட பின்னரே அதைச்செய்யமுற்படவேண்டும். இதனல் சிறப்புற்ற, மனம்நோகாத வாழ்க்கையை தனது வாழ்நாளில் அமைத்துக்கொள்ள முடியும். எந்த ஒரு மனிதனும் தனது வாழ்நாளில் பூரணத்துவம் அடைந்த வாழ்க்கையை அடைவது இல்லை. ஏணியின் உச்சத்தில் இருக்கின்ற ஒருபெரிய கல்விமானயிருந்தாலும் சரி, உச்சத்தின் விளிம்பில் இல்லாத சாதாரண ஒருவரையென்ருலும்சரி நமது மாணவ சமுதாயம் இருதரப்பட்டவர்களிடமுள்ள நல்ல கருத்துக்களை பெற்றுக்கொண்டால் தான் ஒழுங்கான வாழ்க்கையை மாணவ சமூகத்தில் ஏற்படுத்தமுடியும். ஆசிரிய சமூகம் சேவையிலிருந்து இளைப்பாறினுலும் தங்களால் செய்யக்கூடிய முன்னேற்றங்களை பாடசாலைகளுக்குச் செய்யவேண்டும்.

வலி கிழக்கு ஆசிரியசங்கத்துக்காகவும் வடமாகாண ஆசிரியசங்கத்துக்காகவும், தொழிற்சங்கத்துக்காவும், ஈற்றில் இலங்கையிலுள்ள ஒன்பது ஆசிரிய சங்கங்கள் எல்லாவற்றையும் இணைத்து உயிர்கொடுத்து சம்மேளனமாக்கிய பெருந்தகையாளர் நிர்வாகத்தை திறம்பட நடத்துவதில் வல்லவர் ஆசிரியர்களுக்கிடையில் உள்ளபல தரப்பட்டபிரச்னைகளுககாகவும்ஒரே குரலோடுபோராடி இயங்கிவந்த நிலையைமாற்றி அமைத்து. 7-ம் வகுப்புடன் 6 ஆசிரியர்களையும் கல்வி கற்பிக்கச்செய்தும், பாடசாலையை விஸ்தரித்தும், சிருர்களை கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் கல்வியில்வல்லவர்களாக்கிய பெருமை ஓய்வுபெறும் தலைமையாசிரியர் விசுவலிங்கத்தையே சாரும்' என வட்டுக்கோட்டைக் கிராமசபைத் தலைவர் திரு. எஸ். நிற்சிங்கம், வட்டுக்கிழக்கு சைவத்தமிழ் வித்தியாசாலையில் 36 வருடங்களாக உதவிஆசிரியராகவும் தலைமை ஆசிரியராகவும் சேவையாற்றி இளைப்பாறும் திரு. க. விஸ்வலிங்கத்தின் பிரியாவிடையில்தலைமைவகித்துப்பேசுகையில் கூறினர்.

பிரியாவிடை வைபவத்திற்கு முன்னர் தலைமை ஆசிரியர் திரு.க. விசுவலிங்கம் வட்டுக்கோட்டை அடைக்கலந்தோட்டம் கந்தசுவாமி கோவிலிலிந்து மேளவாத்தியத்துடன் வட்டுக்கோட்டை மக்களால் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டார்.

பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி அதிபர் திரு. என். சிவஞானம், உரையாற்றிய பின்னர் இளைப்பாறிய தலைமை ஆசிரியர் 'பாடசாலையின் வளர்ச்சிக்கு தன்னுடன் சேர்ந்து உழைத்த ஊர் மக்கள்தான் காரணம் என்ருர்.

விழாவின் இறுதியில் மாணவரின் 'ஞானசம்பந்தர்' என்னும் நாடகமும் இடம்பெற்றது. வழக்கறிஞர் க. குணரத்தினம் நன்றி கூறினர்.


## கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

# கடதாசி விற்பனை

எமது ஸ்தாபனத்தால் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட அல்லது இறக்குமதி செய்யப்பட்ட சகலரக கடதாசிகளும் (நியூஸ் பிறின்ற் தாள்கள் உட்பட) விலைகளில் கட்டுப்பாடோ, அல்லது வரையறையோ இன்றிப் பொதுமக்களுக்குக்கிடைக்கும் இவைகளை தீவடங்கிலும் நியமிக்கப்பட்டுள்ள கையிருப்பாளர்களிடமும் அங்கீகாரம் பெற்ற வர்த்தகர்களிடமிருந்தும் பெறுவதற்குப் பர்மிட்டுகள் தேவையில்லை. கூட்டு ஸ்தாபனத்தின் விலைப்பட்டியலை எழுத்துமூலம் விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

பாடசாலை மாணவர்களின் பெற்ருேர் மற்றும் வாடிக்கைக்காரர்களும் தங்களுக்குத் தேவையான பயிற்சிப் புத்தகங்கள், பிளேயின் அன்ட் கோடிட்ட கடதாசிகள், பிரௌண் பேப்பர், பிறிஸ்ரல் போர்ட், ஐவரி போர்ட், 'கார்ட்ரிஜ்' கடதாசிகள், ரைப்பிங், பிரதிசெய்யும் கடதாசிகள் ஆகியவற்றை தீவடங்கிலும் கூட்டுத்தாபனத்தால் நியமிக்கப்பட்டுள்ள 3000 க்கு மேற்பட்ட கடதாசி விற்பனையாளரிடமிருந்தும் கொழும்பு-2, யூனியன் பிளேஸ், இல. 356-ல் உள்ள கூட்டுத்தாபனத்தின் விற்பனை நிலையத்திலிருந்தும் பெற்றுக்கொள்ள முடியும்

பொது முகாமையாளர்
கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

2284



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலித் தேசிய ஒற்றுமை: 'சிறுபான்மையோர் ஏமாற்றப்பட்டனர்'

## புரட்சிவாத சமசமாஜக்கட்சி தேர்தல் அறிக்கை

**'சுதந்திரக்கட்சி தனது 9 வருடகால ஆட்சியில் பொதுமக்களுக்கு எதிராக ஏனைய அடக்குமுறைச் சட்டங்களையும் பொதுஜனப் பாதுகாப்பு சட்டத்தையும் அடிக்கடி உபயோகித்தது. இரண்டரை வருட காலமாக அவசரகால சட்டத்தின்கீழ் ஆட்சிபுரிந்தது. முதலாவது பண்டாரநாயகா அரசாங்கம்தான் பொதுஜன பாதுகாப்புச்சட்டத்தில் மேலும் அடக்குமுறை அம்சங்களை சேர்ப்பதற்காக அதனைத் திருத்தியது'.**

இவ்வாறு இலங்கை புரட்சிவாத சமசமாஜக்கட்சிவெளியிட்டுள்ள 'புரட்சிவாத சமசமாஜக்கட்சியும், 1970ம் ஆண்டு மே தேர்தலும்' என்ற விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ளது:

மேலும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது வருமாறு:-

இலங்கைப் பாராளுமன்றம் ஏனைய முதலாளித்துவ நாடுகளிலுள்ள பாராளுமன்றம்போன்று முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தினரின் கருவியே. இந்த ஆளும் வர்க்கத்தின் எந்தப்பிரிவு தங்களைப் பாராளுமன்றத்தின் மூலம் நசுக்கும் என்பதைத் தீர்மானிக்க உழைப்பாளர்களுக்கும் தொழிலாளி வர்க்கத்தினருக்கும் ஐந்துவருடத்துக்கு ஒருமுறை அளிக்கப்படும் சந்தர்ப்பமே தேர்தல்.

தொழிலாளிகளுக்கும் உழைப்பாளிகளுக்கும் முன்னே உள்ள கேள்வி 'நாம் சொந்த நலன் கருதி இத்தேர்தலில் பங்கு பற்ற வேண்டுமா?' என்பதாகும். அப்படிப் பங்குபெறவேண்டுமானால் எந்த ரீதியில் பங்கு பெறவேண்டும்.

தமிழ்பேசும் மக்களின் மொழியுரிமையை ஏனைய நியாயபூர்வமான உரிமைகளைத் தொடர்ந்து மறுத்து வருவதன்மூலம் அம்மக்களை அடிமைகள் என்ற நிலையிலேயே வைக்கப்பட்டுள்ளனர்.

தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமை தொடர்ந்து மறுக்கப்பட்டு வருவதன் மூலம் மனித உரிமைகளுக்கப்பாற்பட்டுவிடுகிறது.

3 வருட அவசரகாலச்சட்ட ஆட்சியின்கீழ் மக்களின் ஜனநாயக உரிமைகள் மேலும் மோசமாக நசுக்கப்பட்டன. யூ. என்.பி. ஆட்சியின்கீழ் தொழிலாளர்கள் முதலாளிகளினுல் ஒதுக்கப்பட்டனர்.

போலித்தேசிய ஒற்றுமைக்கொள்கையின் ...

சோஷலிஸ சமூகத்தின் மாற்றத்திற்கு தொழிலாளர்களையும் உழைப்பாளர்களையும் தயார்ப்படுத்தக்கூட்டணியினரால் முடியுமா? ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினரின் கடந்த கால ஆட்சியின்போது இருந்த நிலைமையை பரிசீலிக்கவேண்டியது அவசியம்.

உழைப்பாளர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் உகந்ததாக மாற்றுவது உண்மையான மார்க்கமல்ல. குறைந்தபட்சம் தேவையானசோஷலிஸத்தை அடையப்போராட்டத்துக்கு அவர்களைத் தயார்படுத்துவதே தான் இதற்கான மார்க்கம்.

சோஷலிச அரசியலமைப்பை நீக்கவேண்டும். பதிலாக தொழிற்சங்கப் பிரதிநிதிகள், தொழிலாள வர்க்கத்தின் அரசியல் கட்சிகள் சிறிய விவசாயிகளின் குழுக்கள் ஒதுக்கப்பட்டசிறுபான்மையினர். நாட்டின் உண்மையான உழைப்பாளர்களின் அமைப்புகள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் அடங்கிய அரசியல் நிர்ணய சபையின் மூலம் புதிய அரசியல் திட்டத்தை ஏற்படுத்துவது.

சோஷலிஸ சமுதாயத்தை நோக்கி மாற்றமடையும் திட்டமொன்றுக்கு உத்தரவாதமளிக்கும் கூட்டாட்சியினர் தெரிவித்துள்ள உத்தேச அரசியல் நிர்ணயசபை போலியான அமைப்பாகும். இதனை நிராகரிக்கவேண்டும். அதுமுதலாளி வர்க்கத்தின் ஸ்தாபனவாகவே விளங்கும் நாட்டின் வளத்தையும்மக்களின் சக்திகளையும் ஒருதிட்டவட்டமானமுறையில் ஒன்றுதிரட்டுவதற்கு அரசு உயர்ந்த மேடைகளிலுள்ள எல்லாப் பொருளாதார அமைப்பையும் தனிப்பட்டசொத்துரிமைகளையும் ஏகாதிபத்திய முதலாளி வர்க்கத்தினரிடம் இருந்து பறிமுதல்செய்து தனது அதிகாரத்தில்கொண் ...

### முன்னாள் மந்திரிக்கு தண்டனை

லண்டன், மே 25

டுனிசியா முன்னாள் மந்திரி டொன்சலாவுககு 10 ஆண்டு கடுழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

முன்னாள் பொருளாதாரத் திட்ட மந்திரியான சலாங் தவறுதலாக ஆலோசனை வழங்கியதற்காக மேற்படி தண்டனையை சுப்ரிம்கோடு வழங்கியது: இவர்மீது கூட்டுறவு நிதி சம்பந்தமான விஷயத்தில் தவறுதலாக ஆலோசனை வழங்கியதாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

### வெங்காயம் திருப்பப்படுகிறது

மட்டுவில், திங்கள்

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மூலம் விற்கப்பட்ட விதை வெங்காயம் பழுதடைந்துள்ளதென விவசாயிகளால் புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து வெங்காயத்தைத் திருப்பிப் பெறுவதற்கு விவசாய இலாகா ஒப்புக்கொண்டுள்ளது.

மட்டுவில் சோமாஸ்கந்தா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பழுதடைந்த வெங்காயத்துக்குப் பதிலாக நல்ல வெங்காயம் தருவதாகவும், அல்லது பெறுமதி தருவதாகவும் கூறியதைத் தொடர்ந்து வெங்காயம் திரும்பக் கொடுக்கப்படுகிறது.

### லொறி விபத்து; ஒருவர் பலி

### புதியபாதையை காட்டும்

உடுப்பிட்டி, திங்கள்

'தமிழரசு, தமிழ்க்காங்கிரஸ்கட்சிகள் காட்டிவந்த தவறுன பாதையை விட்டு புதிய பாதையைக் கூட்டு முன்னணி காட்டுகின்றது. இடதுசாரி முன்னணியை ஆதரிப்பதின் மூலம் தான் இந்நாட்டின் சகல பிரச்னைகளையும் தீர்க்கமுடியும்.

காங்கேசன் துறைத் தொகுதிக் கம்யூனிஸ்ட் வேட்பாளர் திரு. வி. பொன்னம்பலம், உடுப்பிட்டியில் கம்யூனிஸ்ட் வேட்பாளராகப் போட்டியிடும் திரு. பொன்குமாரசாமியை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு வலியுறுத்தினர்.

திரு வி. பொன்னம்பலம் மேலும் பேசுகையில், 'தமிழரசும், காங்கிரசும் வடக்கிலா, கிழக்கிலா பல்கலைக் கழகம் நிறுவுவது என்ற பிரச்சினையை உண்டாக்கியுள்ளன. நாம் வடக்கு கிழக்கு இருமாகாணங்களிலும் பல்கலைக்கழகங்கள் பல தொழிற்சாலைகளை நிறுவுவோம் வேலையில்லாப் பிரச்னையை ஒழித்துக்கட்டுவோம் மக்கள் கமிட்டியை நிறுவி மக்களின் பிரச்னைகளுக்கு ஒரு தீர்வுகாண்போம், என்று சொன்னர்.

### யாழ். கொழும்புத்துறை பஸ்சேவை சீர்கேடு

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ் - கொழும்புத்துறை பஸ்சீர்கேட்டினுல் பாதிக்கப்பட்டுள்ள அப்பகுதி பிரயாணிகள் இச்சீர்கேட்டைச் சுட்டிக்காட்டி அவற்றை நீக்கி நல்ல இ. போ. ச. சேவையளிக்குமாறு யாழ்ப்பாண பிராந்திய முகாமையாளருக்கு ஒரு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

அம்மகஜரில் அவர்கள் தெரிவித்துள்ளதாவது: நேர அட்டவணைப் பணியாளர்கள் இப்பகுதிச் சேவையைத் திரும்பிப்பார்ப்பதில்லை மணிக்கணக்காகக் காத்து நிற்கும்பிரயாணிகள் அவரிடம் சென்று விசாரித்தால் 'பஸ் பிறேக்டவுண்' அல்லது பஸ் வரும் என்ற பதிலைமட்டுமே அளிப்பர் பிரயாணிகள் குறைவாக இருந்தால் ஒரு சேவையை ரத்துச் செய்துவிடுகிருர்கள் இதனுல் அங்கு நிற்கும் பிரயாணிகளும் வழிகளில் காத்து நிற்கும் பிரயாணிகளும் பெரிதும் கஷ்டப்படுகிருர்கள். இதை நோக்கும்போது பஸ்கம்பனிகள் காலத்து நிகழ்ச்சிகள் தான் மனதில் தோன்றுகிறது. அதாவது 'ஆட்கள் சேர்ந்தால்தான் பஸ்' என்ற நியதியாகும்.

# "ஒரே தலைமையில் ஒன்றுபடுவோம்"

வல்வெட்டித்துறை, ஞாயிறு

"தமிழ்மக்களின் உரிமையைப் பெறவேண்டுமானுல், ஒரே கட்சியின் கீழ் ஒரே தலைமையிலே ஒன்றுபட்டு நிற்கவேண்டும். அப்படி ஒருமித்து கட்டுக்கோப்பாக நின்ருலே இழந்துவிட்ட உரிமைகளைப் பெற்றுவிடமுடியும். கொள்கையற்றவர்களும் சுயஇச்சைகளும் தமிழினத்தைவழி நடாத்தமுடியாது. எனவேதான் கொள்கைப்பிடிப்பும், இலட்சியமும், தியாக உணர்வும் படைத்த தமிழரசுக்கட்சியினரை ஒரே அணியில் தெரிவுசெய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்"

வல்வெட்டி அம்மன் கோவில் முன்றலில் ...

கிரஸ் கட்சி பலவிதமான கெடுதிகளைச்செய்தது. கடந்த முறை மூன்று பேரை அனுப்பி மூன்று 'பொத்தல்'களை தமிழினம் ஏற்படுத்திவிட்டது. இந்தப் பொத்தல்கள் இம்முறை அடைக்கப்பட வேண்டும்" என்ருர்.

கோப்பாய் எம். பி. திரு. கதிரவேலுப்பிள்ளை பேசுகையில், "தமிழ்க்காங்கிரஸ்காரர் தீண்டாமைப் பிரச்னையில் இருபக்கமும் பேசி, அந்தப்பிரச்னையை தீர்த்து வைக்காமல் வளர்த்து அதன் மூலம் பதவியைக்கைப்பற்ற முயல்கின்றனர்" என்ருர்.

உடுப்பிட்டி தமிழரசுக் ... திரு. கே. ... பேசுகையில், "உடுப்பிட்டித் தொகுதியில் ...

ஜெருசலம் — கோலான் ஹைட் தவிர

# ஆக்கிரமித்த அரபுப் பகுதிகளை திருப்பிக் கொடுக்க வேண்டும்

## முன்னாள் இஸ்ரேல் பிரதமர் பென்குரியன் கருத்து

நியூயோர்க், மே. 25

அரபு நாடுகளிடமிருந்து கைப்பற்றிக்கொண்ட ஜெருசலம், கோலான் ஹைட் ஆகிய பகுதிகளைத்தவிர மற்ற எல்லாப்பகுதிகளையும் இஸ்ரேலியர் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும் என்று இஸ்ரேலின் முன்னாள் முதலமைச்சர் பென்குரியன் கருத்துவெளியிட்டிருக்கிருர்.

'டைம்' சஞ்சிகைக்கு அளித்துள்ளபேட்டியொன்றில் இந்தக்கருத்தை வெளியிட்டிருக்கிருர்.

மேற்காசியாவில் பிரதேசங்களைக் கைப்பற்றிக் கொள்வதைவிட அமைதியையே நான் முக்கியமாகக் கருதுகிறேன் என்று திரு. பென்குரியன் தெரிவித்திருக்கிருர்

இஸ்ரேலுக்குப் போதிய அளவு நிலப்பரப்பு இருக்கின்றது. இன்னும் 50 அல்லது 60 லட்சம் யூதர்களுக்குப்போதுமான அளவுநிலம் இஸ்ரேலிடமிருக்கிறது என்றும் அவர் தெரிவித்திருக்கிருர்.

### தொழிற்பதிவுக் காரியாலயம்

பண்டத்தரிப்பு திங்கள்

காங்கேசன்துறையைச் சூழவுள்ள கிராமங்களின் நலனை முன்னிட்டு காங்கேசன்துறைப் பட்டின சபை அலுவலகத்தில் தொழிற்பதிவுக் காரியாலயம் ஒன்று திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. இக்காரியாலயத்தில் சனிக்கிழமைகளில் வேலையற்ருேர்களின் பெயர்கள் பதிவு செய்யப்படும். போயா அல்லது விடுமுறைகள் சனிக்கிழமைகளில் வருமாயின் அடுத்த நாளில் இக்காரியாலயம் செயற்படுமாம்.

ஆசிரியர்களுக்கு

### தியாக உணர்வு வேண்டும்

உடுப்பிட்டி, திங்கள்

ஆசிரியர்களின்பணி மகத்தானது ஒரு மாணவனை நல்ல பிரஜையாக உருவாக்குவதின் மூலமே பல சந்ததிகளை நற்பிரஜைகளாக உற்பத்தி செய்யமுடியும் ஊதியத்தை எதிர்பார்ப்பது ஆசிரியர்களின் பணிக்கு ஒவ்வாதது ஆசிரியர்கள் தியாக உணர்வுடன் பணிபுரியவேண்டும்.

மேற்கண்டவாறு உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரி பிரம்மஸ்ரீ எஸ். மகேஸ்வர ஐயர் வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரி வருடாந்தப் பொதுப்பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டுபேசுகையில் குறிப்பிட்டார்.

மாணவர்களுக்கு 'குறிப்புகள்'' கொடுப்பதால் அது அவர்களின் ஆற்றலை வெளிப் ...

# '15 வருடத்தில் உரிமை பெற்றுவிட முடியுமா?'

யாழ்ப்பாணம், செவ்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் எம்மை வழி நடத்திச்சென்ற தமிழ்ப் பிரமுகர்கள் எங்களுக்கென்று ஒரு ஸ்திரமான நிலையை உண்டாக்கித் தராமல்சென்றுவிட்டனர். அவர்களுக்குப் பின் 50க்கு 50 என்று சம அந்தஸ்தென்று கூறி ஆட்சிமன்றம் சென்ற எமது பிரதிநிதிகளும் அவைகளையெல்லாம் மறந்து சிங்களத் தலைவர்களிடம் சரணுகதியடைந்துவிட்டனர்: அதன் காரணமாக எம்மத்தியில் ஏற்பட்ட அரசியல் இருளை அகற்ற உதயமானதே தமிழரசு'' என காங்கேசன்துறைத்தொகுதி தமிழரசுவேட்பாளர் திரு. சா. ஜே. வே. செல்வநாயகத்தை ஆதரித்து மாதகல் நுணசை ப. நோ. கூ. சங்கத்துக்கருகில் நடைபெற்ற தேர்தல பிரசாரக் கூட்டத்துக்கு தலைமைவகித்துப்பேசிய சங்கீதபூஷணம் திரு. வி. பரமலிங்கம் குறிப்பிட்டார்.

எத்தனையோ நாடுகளில் ஆரம்பிக்கப்பட்ட சுதந்திரப் போராட்டங்கள் எவ்வளவோ ஆண்டுகளாகியும் பலனளித்திருக்கையில், தமிழரசு 15 வருடங்களாக நடாத்திவரும் போராட்டங்கள் தோற்றுவிட்டதாகக் கூறுவது தவறு. தொடர்ந்து போராட்டம் நடாத்த எங்களை இன மத பிரதேசவேறுபாடின்றி ஒற்றுமைப்படுத்திய தமிழரசை நாமும் இன மத பிரதேச வேறுபாடின்றி ஆதரிக்கவேண்டுமென்றும் அவர் மேலும் பேசுகையில் கூறினர்.

திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் பேசுகையில், தமிழரசு அதுதோன்றிய காலம் தொட்டு தமிழ்ப் பேசும் மக்களுக்காக பாடுபட்டு வந்திருக்கிறது என்ருர்.

வட்டுக்கோட்டை வேட்பாளர் திரு. அ. அமிர்தலிங்கம், மூதவை உறுப்பினர் திரு. சு. நடராசா, வழக்கறிஞர் சந்திரகாசன், பண்டிதர் ப. ராஜகுரு உட்பட மற்றும் பலரும் இக்கூட்டத்தில் உரையாற்றினர்.

### யாருடையது?

சித்தஸ்கேணியைச் சேர்ந்த அ. பேரம்பலம் என்பவரால் யாழ்ப்பாணத்தில் கண்டெடுக்கப்பட்ட மோட்டார் வாகன சாரதி 'லைசென்ஸ்' ஒன்று ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்டுள்ளது. உரியவர் பெற்றுக்கொள்ளலாம்.

# தேர்தல் போட்டி-1970

இலங்கையில் 7-வது வாய் ... நேரே கொடுக்க ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனநாயக உரிமைகள்மோசமாக நசுக்கப்பட்டன. யூ. என். பி. ஆட்சியின்கீழ்தொழிலாளர்கள் முதலாளிகளினுல் ஒதுக்கப்பட்டனர்.

போலித்தேசிய ஒற்றுமை ஐக்கியத்திஞல் சிறுபான்மையினர் ஏமாற்றப்பட்டனர்.

ந்த மேடைகளிலுள்ள எல்லாப் பொருளாதார அமைப்பையும் தனிப்பட்டசொத்துரிமைகளையும் ஏகாதிபத்திய முதலாளி வர்க்கத்தினரிடம் இருந்து பறிமுதல்செய்து தனது அதிகாரத்தில்கொண்டுவரவேண்டும்.

# 'தமிழரின்இன்றையநிலைக்கு அரசியலமைப்பே காரணம்'

அல்லைப்பிட்டி, திங்கள்

"தமிழ்ப்பேசும் பிரதிநிதிகள் ஆளுங்கட்சியில் இருந்தாலென்ன எதிர்க்கட்சியிலிருந்தாலென்ன தமிழ் பேசும் மக்களை இரண்டாந்தரப்பிரஜைகளாக்கி அவர்களின் தனித்தன்மை அழியக்கூடிய நிலையை ஏற்படுத்தியது இன்று இந்நாட்டில் நிலவுகின்ற அரசியலமைப்பேயாகும்" என பண்டிதர் கா. பொ. இரத்தினம் அனலைதீவு பிள்ளையார்கோவிலடியில் நடைபெற்ற தமிழரசுக் கூட்டமொன்றில் பேசும்போது குறிப்பிட்டார்

முன்னுள் கி. ச. தலைவர் திரு. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பண்டிதர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"இன்றைய ஒற்றைஆட்சி அமைப்பின் கீழ் தமிழ் பேசும் மக்களுக்கு ஏற்பட்ட பேராபத்துக்களில் ஒன்று எமது பாரம்பரிய பிரதேசம் அரசாங்கத்தின்திட்டமிட்ட குடியேற்றத்தினுல் பறிக்கப்படுவதாகும். இந்நிலைமாற வேண்டுமாளுல் நாம் தொடர்ந்துபோராடிஇணைப்பாட்சியை ஏற்படுத்தச் செய்யவேண்டும். 1956-ம் ஆண்டு தொடக்கம் தனிச் சிங்களத்திணிப்பைஎதிர்த்து ஆட்சிமன்றத்திற்கு உள்ளும், வெளியும் தமிழரசுக் கட்சியொன்றே போராடி வருகின்றது. பல இன்னல்களுக்கிடையே நாம் நடாத்திய இயக்கங்களினுலும் போராட்டங்களினுலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிங்களத் திணிப்பை ஓரளவிற்குத்தடுத்து நிறுத்தினேம். 1965-ம் ஆண்டின் பின் அரசாங்கத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் மூலம் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சட்டபூர்வமாக சிங்களத்தோடு, தமிழுக்கும் சம அந்தஸ்துப் பெற்றிருக்கின்றேம். ஏனைய மாகாணங்களில்தமிழ்பேசும் மக்கள் தமிழில் அரசாங்கத்தோடு தொடர்புகொண்டு தமிழில்பதிவுபெறும் உரிமையும் சட்டபூர்வமாக நிலைநாட்டப்பட்டிருக்கின்றது."

## வருடாந்த உற்சவம்

யாழ்ப்பாணம், செவ்

புராதனப் பெருமை வாய்ந்த இணுவில் தெற்கு ஸ்ரீபரராசசேகரப் பிள்ளையார் கோயிலின் வருடாந்த உற்சவம் இம்மாதம் 28-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. அடுத்த மாதம் 6-ம் திகதி தேர்த்திருவிழாவும், அடுத்த நாள் தீர்த்தத்திருவிழாவும் 8-ம் திகதி பூங்காவன உற்சவமும் நிகழும்.

## 'கல்லோயா குடியேற்றம்: நான் பொறுப்பல்ல'

மாவிட்டபுரம், திங்கள்

'நான் குற்றம்செய்துவிட்டேன் என்று கூறுகிருர்கள் தமிழரசார் 49-ம் ஆண்டு நான மந்திரியாக இருந்த போது கல்லோயாவில் சிங்களக்குடியேற்றம் நடத்தினேன். அதுதான் தமிழ் இனத்துக்கு நான் செய்த துரோகம் என்று தமிழரசுவாதிகள் கூக்குரலிடுகின்றனர். இவர்கள் கூறுவது முழுப்பொய். நான் மந்திரியாக இருந்து 48ம் ஆண்டு விலக்கப்பட்டேன் ஆனல் சிங்களக்குடியேற்றம் 49-ம் ஆண்டுதான் நடந்தது"

இவ்வாறு காங்கேசன் துறைத்தொகுதியில் ஈழத்தமிழர் ஒற்றுமை முன்னணியின் வேட்பாளராகப் போட்டியிடும் திரு. வி. சுந்தரலிங்கம் தம்மைஆதரித்து சித்திரமேழிச் சந்தியில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையில் கூறினுர்.

திரு ஜோசேப் நவரத்தினம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் "நான் கத்தோலிக்க வேதப் பாடசாலைகளிலேயே ஆரம்ப கல்விபயின்று இறுதி பட்டப்படிப்பும் முழுப்படிப்பும் படித்த பள்ளிகூடங்கள் யாவும் வேத கத்தோலிக்க பாடசாலைகளாகயிருக்கும்போது நான்அந்தசமயத்துக்கு துரோகம் செய்வேஞ?

பண்டா - செல்வாஒப்பந்தம் மூலம் தமிழரசார் தனிச்சிங்களச்சட்டத்தை ஏற்றனர் என்ருர்.

இளைப்பாறிய அதிபர் பண்டிதர் வே. சங்கப்பிள்ளை பேசுகையில்

நம் தலைவர் வி. சுந்தரலிங்கம் சரியான மூளைசாலி மூளையைப் பிழையாகப் பாவித்துப் போட்டாடு எனக் குற்றம்சாட்டப்படுகிறது. ஒருயந்திரத்தைப் இயக்கும் அளவுக்கு பூட்டருபட்டுவிட்டால் அதில் ஒந் பிழை ஏற்பட்டால் அவ்யரித்தை வைதிருப்பவன் திருத்தக் கூடியவனுகஇருக்க வேண்டும்இதுபோலநம்தலைவர் அனுப்பப்பட்டுஆட்சிமன்றத்தை இயக்கி சில உரிமைகளைப் பெற்றும் சில உரிமைகளை இழந்து வந்தபோதும் அதற்கு பின் சென்ற தமிழ் தலைவர்கள் அந்த இயந்தியாத்தை திருத்தம் செய்யாதபடியால்தான் இந்நிலை ஏற்பட்டது. ஆதலால் இயந்திரத்தின் பிழையை நீக்கக் கூடிய தலைவரை இம்முறை அனுப்புங்கள் என்ருர்.

திரு. கதிரமலையான், திரு. எஸ். கார்த்திகேசு, த. கனகசுந்தரம், வி. சண்முகநாதன் த. சிவலிங்கம் சு. து. சண்முகநாதக்குருக்கள் உட்படப்பலர் உரையாற்றினுர்கள்.

திரும்பக் கொடுக்கப்படுகிறது.

## லொறி விபத்து; ஒருவர் பலி

யாழ்ப்பாணம், செவ்.

லொறி ஒன்றினுல் மோதுண்ட 15 வயது இளைஞன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில்அனுமதிக்கப்பட்டுமரணமானுர்.

பருத்தித்துறை கடற்கரை வீதியில் நடைபெற்ற இவ்விபத்து சம்பந்தமாக மாவட்ட பதில் நீதிபதி திரு எஸ். கனகரத்தினம் ஸ்தல விசாரணை நடத்தினுர்.

லொறிச் சாரதியான எஸ் கே. சுப்பிரமணியம் 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதியளிக்கப்பட்டு, இம்மாதம் 29-ந் திகதி பருத்தித்துறை கோர்ட்டில் ஆஜராகும்படி உத்தரவிடப்பட்டது.

அன்ரன் கிறிஸ்ரி வலன்ரைன்என்பவரே மரணமானவர்.

மும், தியாக உணர்வும் படைத்த தமிழரசுக்கட்சியினரை ஒரே அணியில் தெரிவுசெய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்."

வல்வெட்டி வண்ணிச்சி அம்மன் கோவில் முன்றலில் உடுப்பிட்டி தமிழரசுக்கட்சி வேட்பாளர் திரு. கே ஜெயக்கொடியை ஆதரிக்குமுகமாக நடந்த பிரசாரக்கூட்டத்தில் தமிழரசுக்கட்சிப் பொதுச்செயலாளர் திரு. ஏ. அமிர்தலிங்கம் பேசுகையில், மேற்கண்டவாறு சொன்னுர்

சமாதான நீதவான் திரு ஐ கணேசலிங்கம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில், "தமிழ்பேசும் இனத்துக்கு தமிழ்க்காங் வைக்காமல் வளர்த்து அதன் மூலம் பதவியைக்கைப்பற்ற முயல்கின்றனர்" என்ருர்.

உடுப்பிட்டி தமிழரசுக் கட்சி வேட்பாளர் திரு. கே. ஜெயக்கொடி பேசுகையில், "உடுப்பிட்டித் தொகுதியில் யார் வெற்றிபெறுவார்கள் என்பதை மக்கள்தான் தீர்மானிக்க வண்டுமே தவி தமிழ்க்காங்கிரஸ் தீர்மானிக்கமுடியாது" என்ருர்.

திரு. ஐ. கணேசலிங்கம் தமதுதலைமையுரையில் 'தாம் கடந்த பல வருடகாலமாக காங்கிரஸ் கட்சியிலும்ஜி. ஜி. யின் வலதுகரமாகவும் இருந்து இப்போது அவர்களது உண்மைக் கோலத்தை உணர்ந்து வெளியேறிவிட்டேன்' என்ருர்.

மற்றும் பலர் பேசினர்.

டாந்தப் பொதுப்பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டுபேசுகையில் குறிப்பிட்டார்.

மாணவர்களுக்கு 'குறிப்புகள்" கொடுப்பதால் அது அவர்களின் ஆற்றலைவெளிப்படுத்தாதுஎன்றும், இதனுல் பாடங்களை விளங்கப்படுத்த நேரமிராது என்றும், பெற்ருேர்-ஆசிரியர் ஒத்துழைப்பின் அவசியம்பற்றியும் அவர்வலியுறுத்தினுர்.

பரிசளிப்பு விழாவிற்குத் தலைமைவகித்தகல்லூரி அதிபர் திரு. எம். எஸ். சீனித்தம்பி தமது தலைமையுரையில் கல்விப்பகுதியினர் கல்லூரிக்குத் தொழிற்கூடம் நீரிறைக்கும் இயந்திரம் ஆகியவை கொடுத்திருப்பதற்கு நன்றிதெரிவித்தார்.

# 'ரூபாய் நோட்டில் தூய தமிழ் எங்கள் முயற்சி'

— தமிழரசு

மட்டுவில், திங்கள்

'உலகவங்கி நிபுணர்களும் பொறியியலாள நிபுணர்களும் மகாவலி கங்கையை வடக்கேபதவியாவரைதிருப்புவதற்கு சுமார் 30 ஆண்டுகள் பிடிக்கலாமென திட்டமிட்டுள்ளனர். இதில் மகாவலி தனது இடத்திலிருந்து திசைதிரும்பி வடதிசைக்குத் திரும்பும் வழியிலே உள்ள மலைகளைக் குடைந்து கங்கைவரப் பாதை அமைப்பதற்கு மட்டும் ஐந்துமுதல் 10ஆண்டுகள்வரை எடுக்கலாம் என்று திட்டமிடடுக் கூறியிருக்கும் அதே வேளையில், மூன்றே மூன்று ஆண்டுகளில் தான் மகாவலியை வடக்கே திருப்பி யாழ் குடாநாட்டிற்குக் கொண்டுவந்துவிடுவேன் என்றுதிரு. ஜி. ஜி பொன்னம்பலம் கூறுவதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்'

இவ்வாறு சாவகச்சேரி சந்தைமைதானத்தில் நடைபெற்ற இலங்கை தமிழரசுக்கட்சியின் கேள்விபதில் கூட்டமொன்றில் ஜனுப் வி. முத்துராசா கேள்வியொன்றுக்குப்பதிலளிக்கையில்கேட்டார்.

தென்மராடசிவாலிபமுன்னணிக் தலைவர் வழக்கறிஞர் திரு. நா. அருணுசலம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

ஜனுப் முத்துராசா தொடர்ந்து பதிலளிக்கையில்கூறியதாவது?-

பதினுன்கு ஆண்டுகளில் நீங்கள் சாதித்தது என்ன? என்று பல கேள்விகளை இங்கே கேடடிருக்கிருர்கள்.

1968-ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தமிழ்மொழி விசேடசட்டவிதிகள் மூலம், வடக்குகிழக்கு மாகாணங்களில் சிங்களத்துடன், தமிழுக்கு சமஅந்தஸ்துகிடைத்தது. ஏனையமாகாணங்களில் தமிழ்மூலம்தொடர்புகொள்ளக்கூடிய உரிமைகளும் கிடைத்தன. இது தமிழரசுக்கட்சியின் ஒப்பந்தத்தின் மூலமே எமக்கு கிடைத்துள்ளது என்ற உண்மையை தமிழினம் என்றும் மறுத்துரைக்கமுடியாது.

'500 லட்சம் தமிழர்கள் வாழும் தமிழகத்தில் கூட, இலங்கையில் வாழும் ஒரு சிறியதொகையுடையதமிழினத்திற்கு கிடைத்துள்ள தமிழ்மொழி உரிமைகள் கிடைக்கவில்லை. இலங்கை விமானசேவை முதல், சகல தபால்தலைகள், ரூபாய்நோட்டுகள் வரை இன்று நமது தூயதமிழ்மொழியை இலங்கையில் காணக்கூடியதாக இருக்கிறது' என்று தமிழக அரசியல் பிரமுகர் திரு. மா பொ. சிவஞானகிராமணியாரே தனது செங்கோல் பத்திரிகைமூலம் கூறியுள்ளார். இந்த தமிழ்மொழி உரிமைக்குக் காரணம் தமிழரசுக்கட்சி ஒன்றுதான்என்பதை இங்கு எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. இந்தப் பெருமை எமதுகடசிக்கு மட்டுமல்ல இலங்கை தமிழர் அத்தனை பேருக்கும் உரியது.

சாவகச்சேரி முன்னுள் எம். பி. திரு. வ. ந. நவரத்தினம் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் கூறியதாவது:-

அன்று மலைநாடடுத்தமிழர்கள் பிரச்னையில் அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரன் செய்த அதே காரியத்தைத்தான் இன்று தமிழரசுக்கட்சி செய்ததே என்று ஒரு நண்பர் இக்கேள்வியில் கேடடிருக்கிருர்.

இன்று ஸ்ரீமா-சாஸ்திரிஒப்பந்தத்தை எமது கட்சிஆதரித்ததன் காரணமாக, அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சியைப்போன்று தமிழரசும் துரோகம் செய்துள்ளதுஎன்றுகூறுவதுதவறு

எமதுகட்சி ஆதரித்த ஒப்பந்தம் மலைநாட்டு தமிழ்ச் சகோதரர்களுக்கு அனுகூலமானது. அதன் காரணமாக ஏராளமான மலைநாட்டுத் தமிழமக்களுக்கு அரசியல் உரிமைகள் வழங்கப்படும் என்பதைத் தொடர்ந்தே எமதுகட்சி ஆதரித்தது. அது மட்டுமல்ல ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தத்தை நாங்கள் மட்டும் ஆதரிக்கவில்லை. மலைநாட்டுத்தொழிலாளர்களின் தலைவர்களான திரு. தொண்டமான், திரு. ஏ. அசீஸ் போன்ருேரே ஆதரித்துள்ளனர். அப்படிநாம் ஆதரித்த ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தம் மலையகத்தமிழருக்குப்பாதகமாக உள்ளதென்றுல் அந்தத்தலைவர்கள் ஆதரிப்பார்களா?

# தேர்தல் போட்டி- 1970

இலங்கையில் 7-வது ஆட்சி மன்றத்தின் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதற்கான பொதுத்தேர்தல் இம்மாதம் 27-ம் திகதியன்று நடைபெறவிருப்பது வாசகர்கள் அறிந்ததே. அதையொட்டி 'ஈழநாடு' ஒரு போட்டி நடாத்த ஏற்பாடு செய்திருக்கின்றது. அரசியற் கட்சிகளும் சுயேச்சை வேட்பாளர்களும் பெறும் ஆசனங்களைச் சரியாகக் குறிப்பிடும் வாசகருக்கு முதலாம் பரிசும் ஏறத்தாழ சரியான விடையனுப்பும் வாசகருக்கு 2-ம் பரிசும் அதற்கடுத்த படியான சரியான விடைக்கு 3-ம் பரிசும் வழங்கப்படும்.

போட்டியில் பங்குபற்ற விரும்புகின்றவர்கள் எதிர் வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளும் சுயேச்சை வேட்பாளர்களும் பெறும் ஆசனங்களை இங்கே பிரசுரமாகும் கூப்பனில் உரிய இடத்தில் எழுதி "தேர்தல் போட்டி - 1970" ஈழநாடு, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 26-5-70 க்குப் பிந்தாமல் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவேண்டும். குறித்த திகதிக்குப் பிந்திய கூப்பன்கள் எக்காரணங்களைக் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

ஒருவர் எத்தனை கூப்பன் வேண்டுமானுலும் அனுப்பலாம். நேரே கொடுக்க விரும்புவோர் "ஈழநாடு" அலுவலகத் தபால் பெட்டியில் சேர்க்கவும்.

கேள்விகள்:

1. இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு வடக்கு -கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.

2. அகில இலங்கைத்தமிழ் காங்கிரஸ் கட்சிக்கு வடக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.

3. ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.

4. கூட்டணிக்கட்சிக்கு வடக்கு - கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்

கூட்டணிக் கட்சியுள் அடங்குவன:

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (மாஸ்கோ-பீக்கிங்), லங்கா சமசமாஜக் கட்சி என்பன.

5. சுயேட்சையாளர்களுக்கு வடக்கு-கிழக்கு மாகாணங்களில் எந்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.

சுயேச்சைகளுள் அடங்குவன!

தமிழர் சுயாட்சிக் கழகம், இலங்கைத்தமிழர் ஒற்றுமை முன்னணி, சிங்கள மகாஜனக் கட்சி, இ. கதி. க. மு கட்சி என்பன.

**பரிசு விபரங்கள் விரைவில் வெளிவரும்**

**'ஈழநாடு' ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.**

## 1970 தேர்தல் போட்டிக் "கூப்பன்"

## 'ஈழநாடு'

| | |
|---|---|
| இ. த. அ. கட்சி | |
| அ. இ. த. கா. கட்சி | |
| ஐ. தே. கட்சி | |
| கூ. கட்சி | |
| சுயேச்சை | |

பெயர் :

விலாசம் :

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49. Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் வைகாசி மாதம் 12-ந் திகதி (26 - 5 - 70)


## எதிர்காலமும் தமிழரும் [2]

ஏற்கனவே இப்பத்திகளில் தமிழ்பேசும் மக்களிடையே ஒற்றுமையும் நல்லுறவும் இருக்க வேண்டிய அவசியத்தை பன்முறையும் வற்புறுத்தி வந்திருக்கின்றோம். அரசியல் கட்சிகளிடையோ, தலைவர்களிடையோ மட்டுமல்ல. இலங்கையின் பல்பகுதிகளிலுமுள்ள தமிழர்களிடையே பொதுவாக நல்லுறவும், நல்லெண்ணமும், ஒத்துழைப்பும் இருக்க வேண்டியது மிகமிக அவசியமாகும். ஆனால் தமிழர் தங்கள் உரிமைகளைப் பாதுகாத்துக்கொண்டு முன்னேறுவதற்கு அவசியமான அளவுக்கு அவர்களிடை போதிய நல்லுறவுகள் இல்லையென்றே வருத்தத்துடன் நாம் கூறவேண்டியவர்களாக இருக்கின்றோம். நம்மிடையே பலபல அர்த்தமற்ற பிளவுகளும் பிரிவினைகளுமுள்ளன. இதனால் நமக்கு ஏற்படும் தீமையோ கொஞ்சமன்று. சாதி அடிப்படையில் ஏற்பட்டுள்ள பிரிவுகளால், சமூகத்தில் ஒரு பிரிவினருக்கு வழிபாட்டு உரிமைகளும், சமூகவசதிகளும் மறுக்கப்பட்டுவருகின்றன. சமயத்தின் பெயராலும் நம்மிடை வேற்றுமைகள் பிரதேசம், மாவட்டம், ஊர் அடிப்படையிலும் வேற்றுமைகள் யாழ்ப்பாணத்திலுள்ளதமிழருக்கும், வடமாகாணத்திலே முல்லைத்தீவு, வவ்னியா, மன்னார், வன்னிப்பகுதி முதலிய இடங்களிலுள்ளவர்களுக்கும் போதிய நல்லுறவுகள் இல்லை. இவையெல்லாம் மிக வருந்தத்தக்க உண்மை நிலைமையாகும்.

வடமாகாணத்திலுள்ள தமிழருக்கும் இலங்கையின் மற்ற மாகாணங்களிலுள்ள தமிழருக்கும் போதிய ஒற்றுமையில்லை. மேலும் இலங்கைத்தமிழருக்கும் இப்போது இலங்கை மக்களில் ஒரு பிரிவினரான இந்தியத் தமிழர் எனப்படுபவருக்கும் பரஸ்பர உறவுகள் விரும்பத்தக்க அளவு இல்லை. இவ்விதம் இந்நாட்டிலுள்ள தமிழ்பேசும் மக்களிடையே வேற்றுமைகள் பல உள்ளன. தமிழ்மக்களின் நன்மையைக் கருதியே மிக வேதனையுடன் இவ்வுண்மைகளை நாம் கூறவேண்டியவர்களாக இருக்கிறோம். நபது குறைகுற்றங்களை உணராமலும் அவற்றை நீக்க நடவடிக்கை எடுக்காமலும் இருப்பின் அதனால் பெருந்தீமை ஏற்படுவதாக இருக்கும் தமிழ் மக்களிடையே அனுவசியமாக இருக்கும் வேற்றுமைப் பிரிவுகளை நீக்க, நாம் ஒவ்வொருவரும் உடன் தீவிரநடவடிக்கைகள் எடுக்க முன்வர வேண்டியசமயம் வந்துவிட்டது.

இந்தத் தேர்தல் நாளை 27-ம் திகதி முடிந்ததும், தீவெங்குமுள்ள தமிழரிடை நல்லுறவும் ஒற்றுமையும் ஏற்படுத்த ஒரு நல்ல வேலைத்திட்டத்தை வகுத்து தொடர்ந்து அதை நடத்திவைக்க வேண்டும். சமூகம் உயிர் வாழவேண்டின் இது அவசியமாகும் சமூகம், பொருளாதாரம், சமயம் முதலிய காரணங்களாலும் அரசியல் கட்சிகள், தனிப்பட்ட விரோதங்கள், போட்டிகள், லட்சியங்கள் இவற்றாலும் தமிழ்ச்சமூகத்திலுள்ள பிரிவினைகள் பலப்பல. இந்தப் பிரிவினைகளையும் வேற்றுமைகளையும் நீக்க, தக்க யோசனைகளை "ஈழநாடு" வரவேற்கின்றது. இப் பிரிவினைகளும் வேற்றுமைகளும் தான் தமிழ்பேசும்மக்களின் நலஉரிமைகளை துரதிருஷ்டமாகப் பதிப்பதாகவுள்ளன. இவற்றை நீக்குவதற்கான விரிவான நல்ல வேலைத்திட்டத்தையும் யோசனைகளையும் "ஈழநாடு" மூலம் வாசகநேயர்கள் தெரிவிக்குமாறு வேண்டுகிறோம்.

## பாராட்டுகிறோம்

கொழும்பு விவேகானந்த சபையார் சைவ சமய அறிவுப்பரீட்சையை நாற்பதாவது முறையாகத் தொடர்ந்து வெற்றிகரமாக நடத்தியுள்ளதுடன் வளர்க்கும் பெரும் பணியைச் செய்துவருகின்றனர். நாவலர் பெருமான் அவதரித்த இந்நாட்டிலே சைவ அறிவை இளைஞர்களிடையே வளர்த்து,

# "சம அந்தஸ்து என்று கூறுவதால் கிடைத்துவிடாது"

"மூற்றவெளிக் கூட்டத்தில் திரு. செல்வநாயகம் முழக்கம்" என்ற தலைப்புடன் வெளிவந்த ஒரு செய்தியைப் பார்த்த பத்திரிகை நண்பரொருவர், 'முழக்கம்' என்று போட்டிருப்பதற்குப் பதிலாக 'முனகல்' என்று போட்டிருந்தால் பொருத்தமாக இருக்கும்என்று வேடிக்கையாகச் சொன்னார். இதைக் கேட்டுக்கொண்டிருந்த அன்பர் ஒருவர் உங்கள்பேச்சில் குறுக்கிடுவதற்கு மன்னிக்கவேண்டும். ஆனால் குறுக்கிடாமலிருக்கமுடியவில்லை என்று பீடிகைபோட்டார் பரவாயில்லை நீங்களும் எங்கள் பேச்சில் கலந்து கொள்ளலாம் நாங்கள் வேடிக்கையாகத்தான் பேசுகிறோம் என்று சொன்னேன் 'முழக்கம்' என்பதற்குப் பதிலாக 'முனகல்' என்றுபோட்டிருந்தால் பொருத்தமாக இருக்கும் என்று சொன்னதில் அர்த்தம் இருப்பதாக எனக்குத்தெரியவில்லைஏனெனில் அந்தமுனகலில்இருந்துதான் முழக்கம் பிறக்கிறது. அரசாங்க யந்திரமே ஸ்தம்பித்துப் போகக்கூடியதாக வடக்கிலும் கிழக்கிலும் 1961ம் ஆண்டில் கேட்ட முழக்கம் அந்த முனகலிலிருந்துதானே பிறந்தது என்றார் அந்த அன்பர்.

மேடைக்கு மேடை நின்று முழங்குபவர்களின் பேச்சையும் ஆட்சிமன்றத்தில் சிம்மக்குரலில் முழங்குபவர்களின் பேச்சையும் கேட்பவர்களைவிட செல்வநாயகத்தின் முனகலைத்தானே காது கொடுத்துக் கேட்கிறார்கள்

திரு. செல்வநாயகம் ஒரு தொகுதியின் பிரதிநிதிமட்டும் அல்ல அவர் ஓர் இனத்தின் தலைவர். அந்த இனத்துக்குப்பிரதிநிதித்துவம் வகிப்பவர். இனத்தின் உரிமைகளைப்பாதுகாப்பதும் இழந்த உரிமைகளைப் பெறுவதும் தனது இயக்கத்தினரை வழிநடத்திச் செல்வதும் தான் அவரது முக்கியபொறுப்பும் கடமையுமாகும். ஆனாலும் இந்தப்பொறுப்பையும் கடமையையும் சரிவரச்செய்து வரும் பெரியவர் (தமிழரசுக்கட்சியினர் திரு. செல்வநாயகத்தை பெரியவர் என்றுதான் அழைப்பர்) தொகுதி அபிவிருத்தியிலும் எந்தக் குறையும் விடவில்லை. கங்கேசன்துறைத் துறைமுக அபிவிருத்தி. மயிலிட்டி மீன் பிடித்துறைமுகம், தெல்லிப்பழை ஆஸ்பத்திரி. காங்கேசன் துறை சிமெந்துத்தொழிற்சாலையில் இரண்டாவது 'கிளிம்' இப்படிப் பல பெரியகாரியங்களுடன்சிறிய காரியங்கள் பலவற்றையும் அவர் செய்திருக்கிறார். தொகுதி மக்கள் இதை நன்கு அறிவர்என்று செனட்டர் மூச்சுவிடாமல் சொல்லி முடித்தார்.

இதற்குள் நான் வந்திருக்கும் தகவல் கிடைத்ததும் திரு. செல்வநாயகம் நடுஹோலுக்கு வந்தார். அவர் அருகில் நான்சென்று அமர்ந்தேன். ஆனாலும் செனட்

### சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம்

கே: 1948-ம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட இலங்கை—இந்தியர் பிரஜாவுரிமைச்சட்டத்தைவிட சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் தான் மோசமானதென்றும் இந்த ஒப்பந்தத்தை தமிழரசுக்கட்சியினர் ஆதரித்ததனால் ஐந்தே கால் லட்சம் இந்திய வம்சாவழியினர் இங்கிருந்து செல்லவேண்டியிருக்கிறதென்றும் முந்திய பிரஜாவுரிமைச் சட்டத்தின்படி அதிகமானோர் இலங்கைப் பிரஜைகளாகியிருக்க முடியுமென்றும் தமிழ்க் காங்கிரசார் கூறுகிறார்களே இதற்கு நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

# சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம்: 'பலவந்தமாக இந்தியர் எவரையும் நாடு கடத்த முடியாது'

ப: சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தப்படி திரு. டட்லி சேனநாயக்கா கொண்டுவந்த மசோதாவின்படி இங்குள்ள இந்திய வம்சாவழியினர் எவரையும் பலவந்தமாக இங்கிருந்த இந்தியாவுக்கு அனுப்பமுடியாது. தாமாக விரும்பிச்செல்பவர்களே போகலாம். இந்த மசோதா சரியானதல்லவென்று கூறினால் தமிழ்க் காங்கிரசார் இதை ஏன் எதிர்க்கவில்லை எதற்காக ஆதரித்தார்கள்

### ஒத்துழைப்பு

கே: யாழ்ப்பாண மேயர்



எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்காவுடனும் சரி, திரு டட்லி சேனநாயக்காவுடனும் சரி நீங்கள் ஒப்பந்தம் செய்துகொண்டபோது 'சிங்களம் மட்டும்' சட்டத்தை ஏற்றுக்கொண்டீர்களா?

ப: சிங்களம் மட்டும் சட்டத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இன்று நாட்டிலே இருக்கும் மொழிக்கொள்கை இரண்டு சட்டத்தின்கீழ் அமைந்திருக்கிறது ஒன்று 1956-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சிங்களம் மட்டும் சட்டம். மற்றது 1666-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தமிழ் மொழிச்சட்ட (விசேஷ)விதிகள் தமிழ்மொழிச் சட்டம் 1958-ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டது. சிங்களம் மட்டும் சட்டத்தை ஏற்காது நாங்கள் நடத்திய போராட்டங்களின் விளைவாக திரு. எஸ், டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா தமிழ்மொழிச் சட்டத்தைக் கொண்டுவர நேர்ந்தது, தமிழ்மக்கள் இந்த நாட்டில் வாழவேண்டியவர்கள். இந்த நாட்டைவிட்டு அவர்கள் வெளியேறமுடியாது ஆகவே நமக்கு விருப்பமில்லாத சட்டங்கள் இந்நாட்டில் இயற்றப்பட்டாலும் அவற்றிற்கு எதிர்ப்புத் தெரிவித்து சட்டத்திலுள்ள வலுக்களைக் குறைத்துக்கொண்டு எங்களுக்குத் தேவையான சட்டங்களை உண்டாக்குவதில் முயற்சி

பான்மை மக்களின் ஒத்துழைப்பைச் சிறுபான்மைமக்கள் பெறவேண்டும்என்றும்இல்லையேல்தமிழ் மக்களுக்கு ஒரு நன்மையும் கிடைக்காது என்றும் கூறினார். அவர் சொன்னதைத்தான் 23 ஆண்டுகளின் பின் திரு பொன்னம்பலம் கூறுகிறார். அந்தக்காலத்தில் தேர்தல் போட்டியில் வாகாளப்பெருமககள் திரு. மகாதேவாவுககு எதிராக வாக்களித்துத் தோர்கடித்தார்கள் இப்போது திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் சொல்லும் புத்திமதி சரணாகதியடைவதாகும் சிங்களமககளுககு அடிமையாவதற்குத் தமிழ் மகள் தயாராக இல்லை எனவே திரு. பொன்னம்பலம் சொல்லும் ஒத்துழைப்பு முறையை தமிழ்மக்கள்ஏற்கமாட்டார்கள்

திருசெல்வநாயகம்இதைச் சொல்லிமுடித்ததும் செனட்டர் நடசராசா "தமிழ் மக்கள் தமது சுயமரியாதையை விட்டுக்கொடுக்காமல் சிங்கள மக்களோடு ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறார்கள் உரிமையை வாதாடித்தான் பெறமுடியும் சரணாகதி அடைந்து பெற முடியாது" என்றார்.

### 'நம்நாடு' சினிமாப்படம்

கே: 'நம் நாடு' படம் யாழ்ப்பாணத்தில் திரையிடப்படுவதற்குத் தமிழ்க் காங்கிரசும், தமிழ் அரசுக கட்சியும்தான் தடைசெய்துள்ளதாக திரு. துரையப்பாவை ஆதரித்து நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் யாழ். மாநகர சபை உறுப்பினர் ஒருவர் கூறினார். அதில் உண்மையிருக்கிறதா?

ப: தமிழ் அரசுக்கட்சி இதுபோன்ற வேலைகளில் ஈடுபடுவதில்லை

செனட்டர் நடராசா 'நம்நாடு படம்' எப்போதுவரும் என்று நாங்களும் தான் ஆவலுடன்காத்திருக்கின்றோம்

பேட்டியை முடித்துக்கொண்டு புறப்படுகையில் திரு. செல்வநாயகத்தின்

பேட்டி- திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம்

## ஜெயாறன் எழுதுவது:

யாழ்ப்பாணத்திலே சங்கிலி மன்னன் ஆட்சிசெய்கையில் நகரின் நான்கு பக்கங்களிலும் நான்கு பிள்ளையார்களை ஸ்தாபித்திருந்தாராம். சென்ற வைகாசி விசாகத்தன்று, ஒரு வடிவான பிள்ளையாரை நகரின் முகப்பிலே ஓர் அரசமரத்தடியில் மேடைமீது ஸ்தாபித்துள்ளதைக் கண்டேன். தென்புறமிருந்து யாழ் நகருக்கு வருபவர்களை ஒரு புதிய அழகான வளைவு, 'வருக' என்று வரவேற்கின்றது. இந்த வளைவின் மீது சிகரங்களுடன் கூடிய சிறிய மண்டபத்தில் ஒரு யாழ் வைக்கப்பெற்றுள்ளது. யாழ் மேயர் இந்த வளைவைத் திறந்துவைத்தார். தலைவாசற் பிள்ளையாரை அவரும், நகரபிதாக்கள் சிலரும் வழிபட்டனர்.

அதற்குப் பக்கத்திலே மூன்று ரஸ்தாக்கள் சந்திக்கும் இடத்தில் ஒரு மடம் இருந்ததாம். அதை இராணுவத்தினர் இடித்துவிட்டதாக ஒரன்பர் தெரிவித்தார். பக்கத்தில் ஒரு குளமும் உள்ளது அவ்வழியாக வரும் யாத்திரீகர்கள் நல்லூர் முருகனை நோக்கிக் கும்பிட்டு கற்பூரமும் ஏற்றி வழிபடுகின்றனர். அந்த மடத்தை மீண்டும் கட்டினால் பல வழிப்போக்கர்களுக்கும் பயன்படுவதாக இருக்கும்.

இரு புண்ணியவான்களின் உபயத்தால்தான் அங்குதலைவாசலில் பிள்ளையார் ஸ்தாபிக்கப்பட்டுள்ளார். அதுபோல் அங்கு மடமும் சீக்கிரம் கட்டப்பட்டு, குடிதண்ணீர், மின்வெளிச்சம் எல்லாம் கிடைக்கும்படியாக அப்பிள்ளையாரே அருள்செய்வாராக!

0 0 0

வெள்ளைக்காரர் பரதநாட்டியம் ஆடுவதையும், கர்நாடக சங்கீதம் பாடுவதையும் பார்த்திருக்கிறோம். ஆனால் அவர்கள் தமிழகத்துககே உரிய சிறப்புவாத்தியமான நாதசுரத்தை வாசிக்கவும் இப்போது முன்வந்துள்ளதைப் பார்க்க வியப்பாகவும் மகிழ்ச்சியாகவுமுள்ளது.

அமெரிக்க கோல்கேட் பல்கலைக்கழகத்திலே இசைப் பேராசிரியரான ஸ்கெல்டன் என்பவர், முதல் முதலாக கம்பீரமான நாதசுர நாதத்தைக் கேட்டதும் அதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு விவேகானந்த சபையார் சைவ சமய அறிவுப்பரீட்சையை நாற்பதாவது முறையாகத் தொடர்ந்து வெற்றிகரமாக நடத்தியுள்ளதுடன் இதுவரை தோற்றியவர்களைவிட வரவர அதிகமான மாணவ மாணவிகள் இதில் கலந்துகொண்டுள்ளதுபெரிதும் பாராட்டத்தக்கது. சென்ற ஆண்டு நடந்த பரீட்சைக்கு 556 பள்ளிக்கூடங்களிலிருந்து 51 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் எழுதியதில்சுமார் 22 ஆயிரம் பேர் வெற்றி பெற்றுள்ளனர். பரீட்சை முடிவுகளை ஒரு மாதத்திற்குள் வெளியிட்டுள்ளது. இப்பரீட்சை நடத்துபவர்களின் திறமையைக் காட்டுகிறது.

இலங்கையில் அரசாங்கம் சமய பாடத்தைப் புகுத்துவதற்குப் பல வருடங்களுக்கு முன்பாகவே கொழும்பு விவேகானந்தசபையார் சமய பாடப் புத்தகங்களைத் தயாரித்து பரீட்சைகளை நடத்தி, சைவ சமய மாணவ மாணவியரிடையே சமய அறிவை வளர்க்கும் பெரும் பணியைச் செய்துவருகின்றனர். நாவலர் பெருமான் அவதரித்த இந்நாட்டிலே சைவ அறிவை இளைஞர்களிடையே வளர்த்து, சைவத்தின் மாண்பினை உணர்த்தி, சைவ நெறியில் அவர்களை நடக்கும்படி செய்வது மேலான தொண்டாகும். தமிழகத்திலிருந்து வரும் பல சைவ அறிஞர்களும் விவேகானந்தசபையார் காட்டும் இந்த முன்மாதிரியைத் தங்கள் நாட்டில் பின்பற்ற முயற்சிகள் செய்கின்றனரெனினும் அது இன்னும் கைகூட முடியவில்லை. தமிழகத்திலும் இந்தப் பரீட்சையைக் கொழும்பு விவேகானந்தசபையார் நடத்த முடியாதா? இதற்கான புத்தகங்களை அங்கு அச்சடித்து விற்பனை செய்து பரீட்சையையும் நடத்துவது, தமிழகச் சைவ மாணவர்களை நாத்திகராகாமல் தடுக்கவும், சைவ நீதியை அறிந்து, அவர்கள் உய்யவும் வழிசெய்யும் பெரும் புண்ணியமாகும்.

# 'எமது ஒத்துழைப்பினால்தான் சம அந்தஸ்துகிடைத்தது'

யாழ்ப்பாணம், செவ். 'ஒப்பந்தங்கள் மூலம் உரிமைகள் பெறமுடியாது. சிங்கள மக்களுடன் ஒத்துழைப்பதன்மூலமே உரிமைகளைப் பெறமுடியும் என்பதைக் கடந்தகால அரசியல் சம்பவங்கள் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளது'.

வரணியில் நேற்றிரவு நடந்த தமிழ்க்காங்கிரஸ் தேர்தல்பிரசார கூட்டத்தில் முன்னாள் சாவகச்சேரி எம். பி. திரு. வி. குமாரசுவாமி பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

திரு. குமாரசுவாமிமேலும் கூறியதாவது:- '1949-ம் ஆண்டுமுதல் 1956-ம்ஆண்டுவரை தமிழ்க்காங்கிரஸ் அரசாங்கத்துடன் ஒத்துழைத்தபடியினால்தான் தமிழுக்கும் சிங்களத்துக்கும் நாடுமுழுவதும் சம அந்தஸ்து இருந்தது. தேசியக்கொடியில்சிறுபான்மையினருக்குஇடம்பெற்றுக்கொடுத்ததும்அரசியல் சாஸனத்தில் 29வது ஷரத்தைப் பெற்றதும் தமிழ்த் தந்தி அனுப்பக்கூடிய வசதி பெற்றதும் இந்தஒத்துழைப்பினால்தான் முடிந்தது. அது மட்டுமல்ல, 56-ம் ஆண்டுவரை தமிழ்ப்பிரதேசங்களுக்கு சுமார் 400 கோடி ரூபா ஒதுக்கச்செய்து மூன்று தொழிற்சாலைகளையும் நிறுவ முடிந்தது இந்தஒத்துழைப்பு மூலம்தான். கிளிநொச்சிப் பகுதியில் பல குடியேற்றத் திட்டங்களை ஆரம்பித்து 4000 குடும்பங்களைக் குடியேற்றியதும் இதனால்தான்

திரு. எஸ். பி. மயில்வாகனன், ரி. குலேந்திரராசா, கே சிவதாசன் உட்படப் பலர் பேசினார்கள்.

— —

## குருபூசை

யாழ்ப்பாணம், திங்கள் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்குருபூசை பளை மகா வித்தியாலய ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் சிறப்பாகக் கொண்டாடப் கட்டது. (கு. வி. ம)

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970 ம் ஆ... ம் மாதம் 26 ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

# பேட்டி- திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம்

## (முன்னாள் காங்கேசன்துறை எம்.பி.)

### பேட்டிகண்டவர்:- 'நமதுநிருபர்'

யும் ஆட்சிமன்றத்தில் சிம்மக்குரலில் முழங்குபவர்களின் பேச்சையும் கேட்பவர்களைவிட செல்வநாயகத்தின் முனகலைத்தானே காது கொடுத்துக் கேட்கிறார்கள் என்று அந்த அன்பர்தொடர்ந்துவிளக்கம் கொடுத்தார்

அவர் கூற்று சரியில்லையென்று சொல்லமுடியுமா?

வயது 72, மெல்லிய உருவம் வாயிலிருந்து ஒருவார்த்தைவெளிவருவதற்குப் பல நிமிஷங்களாகும். உஷாராக நடக்கமுடியாது ஆனாலும் தீட்சண்யமான பார்வை சிந்தனையால் சுருங்கிய நெற்றியில் எட்டு மடிப்புக்கள். மாற்றுக்கட்சியினரும் மதிப்புக்கொடுக்கும் பண்பாளர் அவர்தான் தமிழரசுக்கட்சியின் ஸ்தாபக தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் 1956-ம் ஆண்டிலிருந்து அவரையும் அவரது கட்சியினரையும் வடக்கு கிழக்கு மாகாணத் தமிழ்ப்பேசும்மக்கள் பெரும்பான்மையாக ஆட்சிமன்றத்துக்கு அனுப்பி வைத்துவந்துள்ளனர். இனவிடுதலை இயக்கத்தை ஆரம்பித்து சிறை சென்றும் தடுப்புக்காவலில் இருந்தும் இந்த நாட்டிலேயே விழிப்புணர்ச்சியொன்றை ஏற்படுத்திய பெருமையும் திரு. செல்வநாயகத்தைச்சாரும்

ஆட்சிமன்றத்தில் சாதித்ததென்ன? என்ற பேட்டிக் கட்டுரைத் தொடரில் திரு. செல்வநாயகத்தின் சாதனைகளையும் கேட்டு வாசகநேயர்களுக்குக்கொடுககவேண்டுமென்பதற்காக அவரைச்சந்திக்க நான் எடுத்த முயற்சிகள் இரண்டு மூன்று தினங்களுக்கு முன்தான் வெற்றியளித்தன.

சிறுபிள்ளையில் வலிப்புநோயின்வேகத்தைக் குறைப்பதற்காக நெற்றியில் நெருப்பால் சுட்ட காயம் வலிப்புநோயின் வேகத்தைக்குறைத்திருந்தாலும் 'பொட்டர்' என்ற பட்டப்பெயரை ஏற்படுத்தி இன்று 'செனட்டர்' என்ற பதவியையும் பெற்றுள்ள புறக்டர் திரு. எஸ். நடராசாவின் துணையுடன் திரு. செல்வநாயகத்தைப் பேட்டிகாணச் சென்றேன்.

### இனத்தின் தலைவர்

"அவர் தமது தொகுதிக்குச்செய்த சேவைகளைப் பற்றி அவரைவிட நீங்களே நன்கறிந்திருப்பீர்கள் அவற்றை நீங்களே சொல்லிவிடலாமே" என்று செனட்டர் நடராசாவிடம்தெல்லிப்பழையிலுள்ள திரு. செல்வநாயகம் வீட்டின் போட்டிக் கோவில்வைத்துக் கேட்டேன், அருகில் நான்சென்று அமர்ந்தேன். ஆனாலும் செனட்டர் தமது உதவி தேவையென்பதை அறிந்து இரண்டடி இடைவெளிக்குள் திரு. செல்வநாயகத்திற்கும் எனக்குமிடையில் வந்து அமர்ந்தார். அவர் ஒலிபெருக்கியாகவும் கூட்டிக்குறைக்கும் இயந்திரமாகவும் உதவினார் என்று சொல்லவேண்டும்

### தமிழ் மொழி சட்டம்

தமிழ் மொழிச்சட்ட (விசேஷ) விதிகளினால் எந்தவித பயனுமில்லையென்றும் பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்திலிருந்த உரிமைகூட தமிழ்மொழிக்கு இன்று இல்லையென்றும் தமிழ்க்காங்கிரசார் கூறுகிறார்கள். உங்கள் கட்சியினரோ தமிழ்மொழிச் சட்ட (விசேஷ) விதிகள் வடக்கிலும் கிழக்கிலும் தமிழ்மொழிக்குச் சமஅந்தஸ்து கிடைக்கச் செய்திருககிறதென்று கூறுகிறீர்கள் யார் சொல்லுவது சரி?' என்று ஒரு கேள்வியுடன் திரு. செல்வநாயகத்துடன் பேட்டியை ஆரம்பித்தேன்.

இதற்கு திரு. செல்வநாயகம் பின்வருமாறு பதிலளித்தார்:-

வடக்கிலும் கிழக்கிலும் தமிழுக்குச் சம அந்தஸ்துக் கிடைப்பதற்குத் தமிழ்மொழிச் சட்ட (விசேஷ) விதிகள் வழி அமைத்துள்ளதென்பது முற்றாக உண்மை. இப்போதுள்ள நிலைமையில் வடக்கு, கிழக்குத் தவிர்ந்த இதர ஏழு மாகாணங்களிலும் சமஅந்தஸ்து கிடைக்க முடியாது அங்கும் சமஅந்தஸ்துப் பெறுவதுதான் நமது நோக்கம். அதற்காகத் தொடர்ந்து முயற்சிசெய்வோம். சம அந்தஸ்து என்று சொல்லிக்கொண்டே இருப்பதால் அது கிடைத்துவிடாது.

தமிழ் மொழிச் சட்ட (விசேஷ) விதிகளால் பிரயோசனமில்லை யென்றால் அந்த விதிகள் ஆட்மன்றத்தில் கொண்டுவரப்பட்ட போது தமிழ்க்காங்கிரசார் அதை எதிர்த்துப் பேசியிருக்கலாம்: எதிர்த்து வாக்களித்திருக்கலாம். அவர்கள் ஏன் அதைச்செய்யவில்லை. ஆட்சிமன்றத்தில் இந்தத் தமிழ் மொழிச்சட்ட (விசேஷ) விதிகள் பயனற்றவை என்று ஏன் பகிரங்கமாகச் சொல்லவில்லை.

### ஒத்துழைப்பு

கே: யாழ்ப்பாண மேயர் தெரிவில் தமிழரசும் தமிழ்க்காங்கிரசும் ஒத்துழைத்தது போல் தமிழ் மக்களின் உரிமைகள் சம்பந்தமாக ஏன் ஒத்துழைக்கக்கூடாது என்று சிலர் கேட்கிறார்களே. இதற்கு என்ன சொல்கிறீர்கள்?

ப: நாங்கள் போகும் பாதையில் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் ஒத்துவந்தால் அவருடைய ஒத்துழைப்பை நாம் பிரயோசனப் படுத்துவதற்குத் தயாராக இருக்கிறோம். ஆனால் நாமெடுக்கும் முயற்சிகள் எல்லாவற்றுக்கும் அவர் (ஜீ. ஜீ.) முட்டுக்கட்டையாக இருக்கின்றார். ஆகையால் இவருடன் கூடி ஒத்துழைப்பதில் ஒரு பிரசனமுமில்லை.

இடையில் செனட்டர் நடராசா குறுக்கிட்டு யாழ். மேயர் தெரிவில் கட்சிரீதியாக நாங்கள் எதுவும் செய்யவில்லையென்றும், கட்சியைச் சேர்ந்த சிலர் அதில் சம்பந்தப்பட்டனர் என்று சொல்வதே பொருத்தம் என்றும் கூறினார். இதைத் திரு. செல்வநாயகமும் ஒப்புக்கொண்டார்.

கே: திரு. டட்லி சேனநாயகாவின் தேசிய அரசாங்கத்தில் நீங்கள்சேர்ந்தபொழுது மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதி ஒருவரை மந்திரி சபையில் அங்கம் பெறவைக்காமல் வேறொருவரைத் தெரிவுசெய்தது தான் பல நன்மைகள் கிடைக்கவழியிருந்தும் தவறவிட்டதற்குக் காரணமென கூறப்படுகிறது. இப்படியொரு சந்தர்ப்பம் இனிமேலும் கிடைத்தால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் இரண்டு மூன்றுபேர் மந்திரிசபையில் அங்கம் பெறுவதற்கு முயற்சிசெய்வீர்களா?

ப: அப்படியொரு சந்தர்ப்பம் கிடைக்கும்போது அதைப்பற்றி யோசிப்போம். இதேசமயம் செனட்டர் திருச்செல்வம் மந்திரிசபையிலிருந்தபோது தன்னிச்சையாக நடந்துகொள்ளவில்லையென்பதையும் கட்சியுடன் ஆலோசனை கலந்துதான் நடந்துகொண்டார் என்பதையும் சொல்லவேண்டும்.

### 'சிங்களம் மட்டும்' சட்டம்

கே: காலஞ்சென்ற திரு. [illegible] நாட்டில் இயற்றப்பட்டாலும் அவற்றிற்கு எதிர்ப்புத் தெரிவித்து சட்டத்திலுள்ள வலுக்களைக் குறைத்துக் கொண்டு எங்களுக்குத் தேவையான சட்டங்களை உண்டாக்குவதில் முயற்சி எடுப்போம்.

கே: சிங்கள மக்களுடன் ஒத்துழைத்தால்தான் உரிமைகளைப் பெறமுடியுமென்று 22 வருடங்களுக்கு முன்னர் தாங்கள் கூறியதை இப்போதுதான் தமிழரசுக் கட்சியினர் ஒப்புக்கொள்கின்றனஎன்று தமிழ்க்காங்கிரசார் கூறுகிறார்கள். இதைப்பற்றி என்ன சொல்கிறீர்கள்?

ப. 1947-ம்ஆண்டு நடந்த தேர்தலின்போது காலஞ்சென்ற திரு. அருணாசலம் மகாதேவா, பெரும் [illegible] செனட்டர் நடராசா 'நம்நாடு படம்' எப்போதுவரும் என்று நாங்களும் தான் ஆவலுடன்காத்திருக்கின்றோம்

பேட்டியை முடித்துக் கொண்டு புறப்படுகையில் திரு செல்வநாயகத்தின் மகன் திரு சந்திரகாசன் நாளைக்கு ஒரு வழககு எப்படியும் அதில் ஆஜராக வேண்டும்என்று செனட்டரிடம் கூற அது முடியாது நீர் நின்றுதானாக வேண்டும் என்று செனட்டர் பதில் அளிகக திருமதி செல்வநாயகம் அதில் தலையிட்டு யோசனை கூற திரு செல்வநாயகம் இவற்றை அமைதியாக கவனித்துககொண்டு நிற்க நாம் அவர்களிடமிருந்து விடைபெற்றுத் திரும்பினோம்

# 'இரு தமிழ்க்கட்சிகளும் இதுவரை ஒன்றும் செய்யவில்லை'

வல்வெட்டித்துறை, திங் "தமிழ்க்கட்சிகளில் தமிழரசுக் கட்சியோ, தமிழ்க் காங்கிரஸ் கட்சியோ பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட பின்னர் சிங்கள க்கட்சிகளுடன் சேர்ந்து மந்திரிப் பதவியை பெற விரும்புவதே தவிர தமிழ் மக்களின் உரிமைக்காக இன்றுவரை பாடுபட்டதே கிடையாது. இக்கட்சிகளின் ஒத்துழைப்பைக் கொண்டு சிங்கள ஆட்சியாளர் தமிழ் மக்கள் மீது ஆட்சி செலுத்தி வருகின்றனர். இவ்வாறு க. சிவானந்தசுந்தரம் பருத்தித்துறைத் தொகுதி தமிழர் சுயாட்சிக் கழக வேட்பாளர் திரு. பொன் கனகராசாவை ஆதரித்து நடந்த தேர்தல் கூட்டத்தில் பேசும்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மு. கனகரத்தினம் தலைமையில் கற்கோவளம் வீரபத்திரர் கோவிலடியில் இக்கூட்டம் நடைபெற்றது. அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

வேட்பாளர் திரு பொன். கனகராசா பேசுகையில்:- 1947-ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை தமிழ் மக்கள் தமிழ்க் காங்கிரசையும், தமிழரசையும் நம்பி அவர்கள் கூறுவதையே சரியென நினைத்து வந்தனர். தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுத் தருவோம் எனச் சொல்லிச் சென்றவர்கள் கடைசியில் மலைநாட்டு மக்களின் வாக்குரிமைகளைப் பறித்தும், வடபகுதியில் இராணுவத்தினரை புகச் செய்தும், தமிழ்மக்களுக்கு அடியும் உதையுமே வாங்கித் தந்தனர். எதிர்காலத்தில் சிங்கள மக்களிடமிருந்து எதுவித பலனையும் எதிர்பாராமல் தமிழர்கள் தனக்கெனச் சுயாட்சியை ஏற்படுத்தி ஆட்சி செலுத்த வேண்டும்." கூறினார்.

திருவாளர்கள்:- ச. ஜெயராசன், க. நாராயணசாமி, கரிகாலன், அத்தண்ணா, எஸ். ஈஸ்வரலிங்கப் பெருமாள் ஆகியோரும் பேசினர்.

— —

# திருடிய வீட்டில் கோழி சமைத்துப் புசித்தனராம்

கொழும்புத்துறை, திங்கள் கொழும்புததுறைப் பகுதியில் கோழித்திருட்டு அதிகரித்து வருகின்றது. அண்மையில் செல்லையா என்பவரது வீட்டில் பல கோழிகளைத் திருடிய கோஷ்டி ஒன்று கோழிச்சொந்தக்காரரின் தோட்டத்திலேயே வைத்து அதைச் சமைத்துப் புசித்துச்சென்றுள்ளதாம் இதுசம்பந்தமாக பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

அதேதினத்தில் சிவகுரு என்பவரது வீட்டில் நின்ற இருபதுககும் அதிகமான வாழைகள் வெட்டப்பட்டு, காய்கறி மரங்கள் தலைகீழாக நடப்பட்டிருந்தனவாம்.



## விற்பனைக்கு

1 ஸ்ரீ 3000 தொடரிலக்க முடைய ஹொபி (Hobby) ஸ்கூட்டர் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் இல. 443, K. K. S. வீதியில் உள்ள பாய் கடையில் தொடர்பு கொள்ளவும் 2253



[illegible] கவுமுள்ளது,

அமெரிக்க கோல்கேட் பல்கலைக்கழகத்திலே இசைப் பேராசிரியரான ஸ்கெல்டன் என்பவர், முதல் முதலாக கம்பீரமான நாதசுர நாதத்தைக் கேட்டதும் அதன் வசப்பட்டு சென்னைக்கு வந்து 8 மாத காலமாக சைதாப்பேட்டை நடராஜனிடம் அதை முறையாகக் கற்றுக் கொண்டாராம்.

"இந்திய இசைக்கருவிகள் எல்லாவற்றையும் விட நாதசுரமே என்னை மிகவும் கவர்ந்தது ஏனெனில் அது மக்களின் இதயத்தைத் தொடுவது. கோவில்களில் வாசிக்கப்படுவது. இறைவனுககுப் பக்கத்திலுள்ளவை, மனித இதயத்துக்கும் சமீபத்திலிருப்பதாகும். அதன் கம்பீரமான நாதம் யாருடைய உள்ளத்தையும் இழுக்கவல்லது" என்றுகூறி. இந்தியாவில் ஒரு குறிப்பிட்ட சாதியினருக்கே இது ஒதுக்கப்பட்டதால், இது அதிக பிரபலமடையவில்லை என்றும் இது வருந்தத்தக்கதென்றும். இனி அமெரிக்காவில் நாதசுர இசை பரவுமென்றும், தமது அமெரிக்க மாணவர் தவில் வாசிப்பதாகவும் பெருமையுடன் தெரிவித்தார்.

சென்னையிலே தனது குருவுடன் சேர்ந்து, மேலுக்கு சட்டை எதுவும் அணியாமல், அவர் நாதசுரம் வாசிக்கும் படமொன்றைப் பார்த்தேன். தமிழ் கலைச்செல்வங்களின் பெருமையை மேல் நாடுகள் வரவர உணர்ந்து அதைப்போற்றி அனுபவிக்க முன்வந்துள்ளதைக் காண எந்தத்தமிழர் தான் பெருமை கொள்ளமாட்டார்?

0 0 0

சுற்றநீ குணங்கணீ கூடலால வாயிலாய், சுற்றநீ பிரானுநீ தொடர்ந்திலங்கு சோதிநீ. கற்றநூற்கருத்துநீ அருத்த மின்ப மென்றிவை, முற்று நீ புகழ்ந்து முன்னுரைப்ப தென்முகம் மனே.

— திருஞானசம்பந்த சுவாமிகள்.

யாழ்ப்பாணம், திங்கள் இந்துப் பல்கலைககழகம் என்ற பெயரை முதலில் எடுத்தவர் காலஞ்சென்ற பிரதமர் எஸ் டபிள்யூ ஆர் டி. பண்டாரநாயகாவே தென்பகுதியில் உள்ள இரண்டு கல்லூரிகளை வித்தியோதய வித்தியாலங்கார என்ற பௌத்த பல்கலைக்கழகங்களாக மாற்றஞ் செய்தகாலை இந்த இந்துப் பல்கலைககழகம் பற்றிய கருத்தும் அவரிடம் எழுந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org